# ஆலயமணி

ஆசிரியர் : புலவர் ஈழத்துச்சிவானந்தன்



போதொடு நீர் சுமந்து ஏத்தி
புகுவார் அவர்பின் புகுவேன்

PRICE: GER 3/50 DM, LON 1.00£, CAN 2.00$

*With best Compliments from*

# LANKA FOOD MART

உணர்வுக்கு ஆலயமணி
உணவுக்கு லங்கா பூட் மார்ட்

**EAST, WEST INDIAN, CANADIAN, SRILANKAN**

## GROCERIES

⇔ Audio, Video for Sale and Rent

- Tropical fine foods, Fresh vegetables, Fruits, Milk....... Ect.
- Grocery, Eversilver Gift items, Household items, Papers & Magazines

*Best Market Price at*

## Lanka Food Market

**1187B Bloor Street West**
**Toronto, Ontario**
**M6H 1M9 Canada**
Tel.: (416) 534-6770

# ஆலயமணி

ஆசிரியர் — புலவர் ஈழத்துச்சிவானந்தன்
கனடா பதிப்பாசிரியர் — சிவ. சிவமோகன்




**390 Dawes Road**
**# 1211 Toronto**
**M4B 2E5**
**Canada**
**Tel.: (416) 757-7062**

# ஆலயமணியின்

## ஆலோசனை அமைச்சு

சட்டஆலோசகர் :- சட்டத்தரணி என். கே. மகேந்திரன் M. A

ஆலோசகர்கள் :-

சோ. செந்தில்முருகன்
S. R. தாகூர்
த. மாணிக்கவாசகர் (நாதன்)
இரா. கந்தசாமி
இரஞ்சினி சண்முகலிங்கம்
பத்மா பேரின்பநாதன்
அன்னலஷ்மி வடிவேலு

க. குணரெத்தினம் C. O.
இந்திராதேவி இரத்தினசிங்கம்
விமலநாயகி சிவானந்தன்
நடா—யோகி

சண். சதாசிவம்
சோம. சச்சிதானந்தன்
நவமணி சிவபாதன்
செல்வகுமாரி
சிவகுமார்
நா. சிவராஜசிங்கம்
மீனா தவரட்ணம்

சிவ - திருவருள்!

இலண்டன் (UK)
தொடர்பாளர்
தயா—ராஜு
Tel.: 44816777977

யேர்மனி தொடர்பாளர்
சோ. அரவிந்தகோஸ்
(மகாமாரியம்மன் ஆலயம்)
Tel.: 4968143223

கனடா பதிப்புரிமை :- சிவ - சிவமோகன்

அச்சமைப்பு :- அபிராமி அச்சகம் -1995

390 Dawes Road
# 1211 Toronto Ontario
M4B 2E5
Canada
Tel.: (416) 757-7062

# எங்கள் இறைவா !
## அருள் செய்க

எல்லாம் தலைகீழாய் போக வேண்டும் என்பது உன் திருவுளமா? தலை கீழாய் நின்றால் வானப் பெருவெளி தெரிவதுபோல் தலை கீழ் வாழ்க்கையால் ஞானப் பெருவெளியைக் காட்ட விரும்புகிறாயா?

தலைகீழாய் நிற்பவர்கள் கண்ணை மூடியோராய் இருந்தால் வானம் தெரியாதது மட்டுமல்ல மானமும் தெரியாது. தலைகீழ் வாழ்க்கையில் ஞானம் பெறமுடியாமல் அறிவுக் கண்களை மூடியோர்களும் இருக்கிறார்கள்.

பிரயோசனம் இல்லாமல் பூமிப்பந்தை உருட்டுகிறாயா?

வடக்கு நோக்கிய உருட்டல்களும், தெற்கு நோக்கிய உருட்டல்களும் உனது திருவிளையாடல்களா? கிழக்கு மேற்கு உருட்டல்கள் தலைகீழ் வட்டமா?

ஒன்றும் போதா எங்களை ஒன்றும் புரியாது ஏங்க வைத்தல் ஏனோ?

இறைவா! எங்கள் தாக்கங்கள் இனிப்போதும் முறைசெய்க முழுமைப்படுத்துக. திருவருள் பொழிந்து தீமையகற்றி நன்மை நாட்டுக.

நீ அருளாது ஒளிந்தால் அஞ்சேல் என்பார் யார் இங்கு? புறப்படுக! புதுமைசெய்க! அற்புதம் காட்டுக!

— கனடாவாழ் சைவமக்கள்

# மணியோசை - 4

## ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே.......!

## கனடாவில் திருவாசகவிழா!

தமிழர் உணர்வுகளில் ஊறிநிற்கும் உயிர் வாசகங்களில் திருவாசகம் உயர் சிகரமாகும். உள்ளந்தாள் நின்று உச்சியளவும் உருக்கும் தேன்திவிலை. சமயம் கடந்த இனங்கடந்த அனுபவ உச்சம். G.U. போப் என்னும் பாதிரியார் திருவாசகத்தை ஓதி ஓதி உள்ளுருகி உருகி கண்ணீர் உகுத்த நாட்கள் திருவாசக வீச்சில் பேசப்படுவது. அகில உலக தமிழாராச்சி மன்றத்தை உருவாக்கி, உலகத்தமிழ் மாநாடு என்பதனை உலகுக்கும் அறிமுகம் செய்து வைத்த தமிழ் தூதர் தனிநாயகம் அடிகள் திருவாசகச் சிந்தனைகளால் தமிழர் உள்ளங்களில் பக்திப் பரவசத்தினை ஏற்படுத்தியவர்.

தமிழ் நாடு தெய்வீகப் பேரவையில் தலைவராய் திகழ்ந்து சமய மறு மலர்ச்சி சான்றோராயும் அருள் நெறித் தந்தையாயும் உலக வலம் வரும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருவாசகத்தைக் குறித்து சொற்பொழிவுகளை நிகழ்த்தும் போது கண்ணீர் சொட்டுச் சொட்டாய் மேடையில் விழுந்து சிதறும். இதனைப் பார்ப்போரும் கேட்போரும் திருவாசகத்திரளில் அருள் வெள்ளம் அள்ள ஆவல் கொள்வர்.

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் திருவாசகம் பண்டு தொட்டுப் பாராயணமாய் பயன் தரு அனு பூதியாய் பயின்று வருகின்றது. ஈழத்தமிழகத்திலும் தென் தமிழகத்திலும் திருவாசகம் பண் சுமந்து பரிசுவிளைவித்தல் பலராலும் அறியப்பட்டதே.

மரபு சார்ந்த பழக்கங்களை வழக்க மாக்கிக் கொள்ளும் தமிழர் தாம் புலம் பெயர்ந்து குடியேறிய மண்ணிலும் தமது மகத்துவங்களை மதித்தனர். போற்றினர். மார்கழித் திங்களில் நடைபெறும் திருவெம்பாவைத் தினங்களில் திருவாசகத்தை திருவருளாகவே எண்ணிவணங்குவர். கடந்த 18.12.1994ல் கனடா றிச்மண்ட் ஹில் இந்து ஆலயத்தில் அதன் அறங்காவலர்களும் பல்வேறு இந்துசமய அமைப்புக்களும் இணைந்து முதன் முறையா திருவாசகவிழாவினை கனடாவில் நடாத்திய பெருமையைப் பெற்றனர்.

றிச்மண் ஹில் இந்து ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. நா. சிவலிங்கம் தலைமையில் நடந்த இவ் விழா இராஜேஸ்வரி பொன்னம்பலத்தின் திருவாசக பாராயணத்துடன் ஆரம்பமாகியது தமிழர் தகவல் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உரையரங்கிலே பிரம்மஸ்ரீ சோம சேகரக்குருக்கள். சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக்குருக்கள். சரவணமுத்துச் சாமி. கவிஞர் வி. கந்தவனம். சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன். பண்டிதர் வீ. வ. நல்லதம்பி. திருமதி வசந்தா நடராசன். சைவப்புலவர் க. சிற்றம்பலம். திரு. ப. க. கனகசபாபதி. திரு. எஸ். அச்சுதன்பிள்ளை. திருமதி தங்கம் இரத்தினசிங்கம். ஆலயமணி ஆசிரியர் புலவர் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கினர்.

முற்பகல் ஆலய மண்டபத்தில் பல அடியார்கள். நடேசப்பெருமான் திருமுன்நிலையில் குழுமியிருந்து திருவாசக முற்றோதல் செய்தமை நெஞ்சைத் தொட்ட நிகழ்ச்சியாகும். திரு. க. இரத்தினசிங்கம். திரு. வே. இ. சண்முகம். திருமதி. தங்கம் இரத்தினசிங்கம் ஆகியோர் முற்றோதலை முறைமைப்படுத்தினர். நண்பகலில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் அ. க. கண்ணையா, சு. சீவரெத்தினம் ஆகியோரால் தொகுக்கப்பட்ட திருவாசகத் தேன்துளிகள் என்னும் நூல் விழாவில் வெளியிடப்பட்டு எல்லோருக்கும் இலவசமாக வழங்கப் பெற்றது.

இவ்விழாவின் ஏற்பாட்டாளர்களான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ண ராஜக்குருக்கள். சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள். திரு. நடராஜா ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

வான்கலந்த மாணிக்கவாசகரின் வாசகத்தைக் கனடாவின் காதுகளும் கேட்கவைத்த புண்ணியத் திருவிழாவை ஆலயமணி வாழ்த்தி மகிழ்ச்சி கொள்கிறது.

*1-2-1995*

**சிவ — சிவமோகன்**
**(கனடாப்**
**பதிப்பாசிரியர்)**

# வாழ நினைத்தால் வாழலாம்....!
# உயரமாக நில்லுங்கள்!

-Dr. R. கோபமேயர்

என்னுடைய வாழ்க்கையில், அதாவது நீண்ட, சம்பவங்கள் நிறைந்த வாழ்க்கையில் நான் தெரிந்து கொண்ட விஷயத்தை இரண்டு வார்த்தைகளில் சொல்லி விடலாம்.

## உயரமாக நில்லுங்கள்!

முக்கியமான, பயன் உள்ள, உதவக்கூடிய இரண்டு வார்த்தைகள்.

உயராமக நில்லுங்கள்!' என்று நான் சொல்லுகின்ற போது நேராக நில்லுங்கள் என்று நான் சொல்லுவதாக மட்டும் அர்த்தமில்லை. நேராக நிற்பதும் அவசியம்தான். நான் சொல்ல வந்தது. 'உங்களுடைய ஆளுமையை உயர்த்திக் கொள்ளுங்கள் என்பதாகும்.' மூன்று நிலைகளில் உயரமாக நிற்பது அவசியமாகிறது.

1. **உடல் அளவில்... உயர்ந்து நில்லுங்கள்**
2. **மன அளவில்... உயர்ந்து நில்லுங்கள்.**
3. **ஆன்மிக அளவில் உயர்ந்து நில்லுங்கள்.**

உங்களுடைய ஆளுமையின் இந்த மூன்று நிலைகளிலும் நீங்கள் உயர்ந்து நிற்கும்போது, வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளையும் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடிய முழுமையான தோற்ற அமைப்பு உங்களுக்குக் கிடைத்து விடுகிறது. வாழ்க்கையில் ஏற்படும் சகலவற்றையும் சமாளிக்கின்ற தன்னம்பிக்கை, திறமை, நிதானம் ஆகியவற்றுடன் வாழ்க்கைப் பாதையில் உங்களால் கம்பீரநடை போடவும் முடிகிறது.

வாழ்க்கைப் பயணத்தைத் துணிச்சலுடனும், வெற்றிகரமாகவும் நடத்துவதற்கு இதைவிட சிறந்த ஆலோசனைகளை என்னால் கூறமுடியாது. மனிதர்களுக்கும் சரி, சந்தர்ப்பங்களுக்கும் சரி நீங்கள் தலைவணங்கத் தேவையில்லாத விரிவான ஆலோசனைகளை நான் சொல்லப் போகிறேன்.

## 1. உடல் அளவில்... உயர்ந்து நில்லுங்கள்

இது ஒரு கலை. ஆனால் சுலபத்தில் கற்றுக்கொள்ளக்கூடிய கலை. இதைக் கற்றுக் கொள்ளும்போது உன்னதமான உற்சாகத்தையும். துணிச்சலான ஆதிக்க உணர்வையும் நீங்கள் பெற்று இருப்பதை உணர்வீர்கள்.

முதலில். நிமிர்ந்து நிற்கக் கற்றுக் கொள்ளுங்கள். கூனிக்குறுகி நிற்காதீர்கள். அதேசமயம் விறைத்த நிலையிலும் நிற்காதீர்கள். நிமிர்ந்து நின்றால் போதும். அமைதியாக. சிரமப்படாமல் உடலை நிமிர்த்துங்கள். தலை எவ்வளவு உயரமாக செல்ல முடியுமோ அந்த அளவுக்கு உடலை நிமிர்த்துங்கள். கஷ்டப்படாதீர்கள். சுலபமாக நிமிர்த்தி. பாரம் கால்களை அழுத்தாமல் நிற்க முயற்சி செய்யுங்கள். இப்போது உங்கள் எடையை நீங்கள் உணராதது போன்ற ஒருநிலை ஏற்படும்.

நடக்கும்போது சுலபமாக. எளிமையாக நடக்கப் பயிற்சி செய்யுங்கள். நடையில் தடுமாற்றம் வேண்டாம் பெண்டுலம் அசைவதைப் போல கால்களை முன்னும் பின்னும் சுலபமாக வீசி மிருதுவாக நடக்க முயற்சி செய்யுங்கள்.

தோளை தூக்கிக் கொண்டு நடக்காதீர்கள். பின்னுக்குத் தள்ளியும் நடக்காதீர்கள். தோள்களின் நிலையில் உங்கள் மார்பைக் கொண்டு மேலே சொன்ன கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள். மார்பை விரிய விடுங்கள். மார்பு உயர்ந்து முன்னே தள்ள நடக்கப் பழகுங்கள்.

தாடையை உயர்த்த வேண்டாம். அப்படி உயர்த்தினால் நீங்கள் கர்வம் கொண்ட மனிதர் என்கிற தோற்றத்தை அது ஏற்படுத்தும். தாடையை உறுதியாகவும். சமநிலையிலும் வைத்திருங்கள். எக்காரணம் கொண்டும் உங்களை சிரமப்படுத்திக் கொள்ளாமல் இவற்றை செய்யுங்கள். காற்றின் மேல் நின்று நடப்பதைப் போல உங்கள் நடை அமையட்டும்.

இப்படி உடலால் நீங்கள் நிமிர்ந்து நிற்கக் கற்றுக்கொண்டு விட்டால் தன்னம்பிக்கை. மற்றவர்களிடம் உங்களுக்கு ஏற்படுகின்ற செல்வாக்கு. மொத்தத்தில் உங்களுடைய முழுமையான தோற்றம் அனைத்துமே சிறப்படைவதை கவனிப்பீர்கள். மற்றவர்கள் உங்களிடம் அதற்குப் பிறகு நடந்துகொள்ளும் விதத்தில் இருந்து இந்தச் சிறப்பினை நீங்கள் உணர முடியும்.

உடல் அளவில் நீங்கள் உயர்ந்து நிற்கும்போது உங்கள் தோற்றத்தில் உள்ள முதுமையில் பல ஆண்டுகள் குறைந்தும் போகும். வயோதிகத்தின் அடையாளமே குறுகிய தோள்களும், கூனல் விழுந்த முதுகும்தான். வயோதிகத்தின் இந்த அடையாளங்கள் உடல் அளவில் நீங்கள் நிமிர்ந்து நிற்கும்போது மறைந்து விடுகின்றன. நிமிர்ந்து நிற்பது ஆரோக்கியத்திற்கும் நல்லது. நரம்புகளின் இறுக்கம் குறைகிறது. தசைகளின் அழுத்தம் விலகுகிறது. ரத்த ஓட்டம் சீராகிறது. மார்பு விரிவதால் சுவாசம் நன்கு நடைபெற்று தேவையான ஆக்ஸிஜன் கிடைக்கிறது.

உடலால் நிமிர்ந்து நிற்கும்போது தோற்றம் மட்டும் இளமையாகக் காட்சியளிப்பது இல்லை. இளமையாகிவிட்ட உணர்வு உங்களுக்கே தோன்றும்.

உங்களுடைய வயது எதுவாக இருந்தாலும், உடல் அளவில் நீங்கள் நிமிர்ந்து நிற்கும்போது உங்களுடைய ஆளுமையின் கவர்ச்சி கூடுதல் ஆகிவிடுகிறது. முன்னே சொல்லியுள்ள ஆலோசனைகளை திரும்பத் திரும்பப் படியுங்கள். உடல் அளவில் நிமிர்ந்து நிற்பது இயற்கையான பழக்கம் ஆகின்றவரையில் அதைப் பயிற்சி செய்யுங்கள்.

இப்போது இரண்டாவது விஷயத்துக்கு வருவோம்.

## 2. மன அளவில்... உயர்ந்து நில்லுங்கள்.

எப்போதும் முதல்தரமாகவே இருங்கள்' என்று ஒரு கோஷம் உண்டு. 'எப்போதும் முதல் தரமாகவே சிந்தியுங்கள்' என்கிற கோஷத்தை அதனுடன் சேர்த்துக்கொள்ள நான் விரும்புகின்றேன். இரண்டாந்தர எண்ணங்களால் உங்கள் மூளையை நிரப்பிக் கொள்ளாதீர்கள். சிறியவற்றை சிந்திப்பதைப் போலவே பெரியவற்றை சிந்திப்பதும் சுலபமானதுதான். நீங்கள் உங்களுடைய எண்ணங்களின் விளைவாகவே உருவாகிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். "ஒருவன் ஆழமாக எதைச் சிந்திக்கிறானோ அதுவாகவே அவன் ஆகிறான்." உங்களுடைய அழுத்தமான எண்ணங்களின் அளவுக்கே நீங்கள் பெரிதாகவோ, சிறப்பானவர்களாகவோ, வெற்றி பெற்றவர்களாகவோ ஆகிறீர்கள். ஆகவே பெருயதையே நினையுங்கள். மன அளவில்... உயர்ந்து நில்லுங்கள்!

நீங்கள் கேட்பதைவிட, வாழ்கை உங்களுக்கு அதிகமாக எதையும் கொடுத்துவிடப் போவதில்லை. நிர்வாகிகள், வேலை கேட்டு வரும்

மனுக்களில் பெரும்பாலனவை குறைந்த சம்பளவேலை கேட்டு வருவதாகவே சொல்லுகிறார்கள். ஒருசிலர் மட்டுமேதான் பெரிய சம்பள வேலைகளுக்கு மனுச் செய்கிறவர்கள். மிக உயர்ந்த சம்பள வேலைகளுக்கு மனுச் செய்கிறவர்கள் அனேகமாக இல்லையென்றே சொல்லி விடலாம். எவருமே பெரிதாக சிந்திப்பது இல்லை. கூட்டத்தில். நீங்கள் உயர்ந்து நிற்க வேண்டுமானால், உங்களை மற்றவர்கள் நிமிர்ந்து நோக்க வேண்டுமானால்... மன அளவில்... உயர்ந்து நில்லுங்கள்.

சாதனைகளுக்கு உங்களுடைய எண்ணம்தான் எரிபொருள். காலையில் உங்களுடைய காரின் எஞ்சினில் குப்பையை நிரப்பிக் கொண்டு நீங்கள் புறப்பட மாட்டீர்கள். அதைப்போலவே உங்கள் மனதில் அச்சம், கோபம், வெறுப்பு, பொறாமை, குற்ற உணர்வு ஆகியவற்றை நிரப்பி அது செயல்படுவதைத் தடுக்காதீர்கள். சிறிய எண்ணங்கள் உங்களை சிறுமைப்படுத்த வேண்டாம்.

நிகழ்காலத்தில் சிக்கி நின்று விடாதீர்கள். உங்களின் நிகழ்காலம் எவ்வளவு முக்கியமற்றதாக வேண்டுமானாலும் இருக்கட்டும். உங்கள் எதிர்காலத்தைப் பாற்றிப் பெரிதாகச் சிந்தியுங்கள். ஆக்கப்பூர்வமாகச் சிந்தியுங்கள்.

சிந்தியுங்கள். "நான் எப்படி மேலும் சிறப்படைய முடியும்?"
சிந்தியுங்கள். "நான் எப்படி இன்னும் அதிமாகச் செய்ய முடியும்?"

இந்த இரண்டும், மதிப்பையும் அளவையும் அதிகமாக்குகின்றன. கற்றுக் கொண்டு புதிய தகவல்களை சேகரியுங்கள். பொருள்கள் இல்லாமல் எதையும் கட்ட முடியாது. ஆகவே கற்றுக்கொள்ளுங்கள். கற்றுக் கொண்டதை வைத்து பெரிதாகச் சிந்தியுங்கள். அப்போது மன அளவில்....... நீங்கள் உயர்ந்து நிற்கமுடியும். வாழ்க்கையைப் பற்றிய உங்களுடைய கண்ணோட்டத்தில் பிரமிக்கத்தக்க மாற்றம் ஏற்பட்டு விட்டதை உணர்வீர்கள். மற்றவர்களின் பாராட்டுதலுக்கும் இலக்காவீர்கள்.

அடுத்து உங்கள் ஆளுமையை உயர்த்துகின்ற மூன்றாவது விஷயத்திற்கு வருவோம்.

### 3. ஆன்மிக அளவில்... உயர்ந்து நில்லுங்கள்

ஒழுக்கத்தால், ஆன்மிக அளவில் உயரமாக இல்லாத எவரும் மற்றவர்களின் மதிப்பீட்டில், ஏன், தங்களுடைய மனசாட்சி படியேகூட உயர்ந்து நிற்க முடியாது. ஆன்மிக அளவில் உயர்ந்து நிற்க முடியாது. ஆன்மிக அளவில் உயர்ந்து நிற்கும்போது, அது உங்களை உயர்த்துவதோடு அமைதியான உறுதியினை உங்களுக்கு அளிக்கிறது. வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகள் உங்களைப் பாதிக்காத நிலையினைப் பெற்று விடுகிறீர்கள்.

ஆன்மிக உயரத்தை நீங்கள் அடையாதபோது, ஆன்மிக அளவில் நீங்கள் உயர்ந்து நிற்க முடியாதபோது — உங்கள் கடவுளே சிறியவர் ஆகிவிடுகிறார்.

பிரஞ்சத்தின் விஸ்தாரத்தை காலத்தின் முடிவில்லாமையை — மரியாதைகளுக்கும் அப்பாற்பட்ட புனிதத்தை — ஏதோ ஒரு ஆன்மிக வழியில் நீங்களும் அவற்றின் ஓர் அங்கம் என்பதை அறியும்போது — அப்போது மட்டுமேதான் ஆன்மிக அளவில் நீங்கள் உயர்ந்து நிற்கமுடியும்.

அதுவே எல்லா நிலை பேதங்களுக்கும் காரணமாகிறது!

ஆகவே வாழ்க்கையை நீங்கள் முழுமையாக வாழ வேண்டுமானால், உயர்ந்து நில்லுங்கள்.

**(1) உடல் அளவில்... உயர்ந்து நில்லுங்கள்**
**— நம்பிக்கையைப் பெறுவதற்காக.**

**(2) மன அளவில்... உயர்ந்து நில்லுங்கள்**
**— ஞானத்தை அடைவதற்காக.**

**(3) ஆன்மிக அளவில்... உயர்ந்து நில்லுங்கள்**
**— வெற்றி கொள்வதற்காக.**

# ஊழ்

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வாழ்க்கைப் பண்ணையில் உயிர்கள் பக்குவப் படுத்தப் பெறுகின்றன. திருவள்ளுவர் உலகத்தின் முதலாகவும். பயனாகவும் சாட்சியாகவும் இருப்பவற்றைப் பாயிரத்தில் ஓதுகிறார். பின் மனிதன் மனையிலும். மனையின் நீங்கிய துறவிலும் செய்யும் கடமைகளை விரித்து ஓதிய திருவள்ளுவர். அச்செயல்களின் பயனாகிய ஊழை ஓரியலாக ஓதுகிறார்.

ஊழைத் தொடர்ந்து பொருட்பால் வருகிறது. அறத்துப்பாலில் பயின்ற வினைகளே ஊழாகவிளைந்து பொருட்பாலில் பயன் தருகிறது. பொருட்பாலில் திருவள்ளுவர் பேசுவதெல்லாம் ஊழின் பயனாக விளையும் உலகத்தையும். அவற்றை வெற்றிகொள்ளும் வழியையும் — வழிவகைகளையுமே பேசுகிறார். அறத்துப் பாலில். ஊழுக்குக் காரணமாக அமையும் ஒழுக்கங்களைப் பேசுகிறார்.

உயிர். பொறி புலன்களால் செய்யும் செயல். செயல்களின் விளைவாகிய ஊழ். அவரவர் செயலின் பயனை — ஊழை அனுபவிக்க வேண்டுமென்ற நியதி. எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் இறைவன். இந்த நான்கினையும் ஆராய்தலே தெளிவு.

ஊழ் வினையின் விளைவு. விளைந்து ஊட்டுதல் என்பது பொருள். "ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" என்பது சிலம்பு. பருவுடலுக்குக் கூழ்உணவு. நுண்ணுடலுடன் கூடிய உயிர்க்கு ஊழ் உணவு. உணவைத் தகுதி பார்த்து மருந்துபோல உண்ணின் உடலுக்குத் துன்பம் இல்லை. முறைகேடான உணவுகளை முறை தவறி. தேவையை மீறி உண்ணின் நீங்காத் துன்பம். எந்த உணவு இன்பத்தைத் தரவேண்டுமோ அதே உணவு துன்பத்தைத் தருகிறது. குற்றம் உணவின் மேலன்று. உடல்மீது அன்று. உணவின்மீது முறைதவறி வைக்கப்பெற்ற இச்சையே காரணமாகும்.

அதுபோல உயிர்க்குச் சிந்தனையும் செயலும் இன்பம் தரும். உய்தியினைத் தரும். உயிருக்கு இயற்கை செயற்படுதலேயாம். அதனால் அன்றோ திருவள்ளுவரும் "மடிசெய்து" என்றார்.

வினைசெய்தல் உயிர்களின் கடமை. வினை செய்தல் மூலமே உயிர்கள் அறிவும் தெளிவும் அழிவிலின்பமும் பெறுகின்றன. ஆயினும் இன்பத்திற் குரியனவாகிய வினைகளே துன்பங்களையும் விளை வித்தலைப் பார்க்கிறோம். இன்பத்தையும் விளைவித்தலைப் பார்க்கிறோம். உயிர் இன்ப துன்பங்களால் சுழலும் சுழற்சியில் சிக்கி அலமருகிறது.

உண்மையில் வினைசெயல் உயிருக்கு நல்லதா? கெடுதலா? வினை செய்தலைத் தவிர்க்க முடியுமா? அப்படி முடிந்தால் வினை செய்தலிலிருந்து விலகுவது நல்லதா? நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் நம்முடைய படைப்புகளா? அல்லது கடவுளின் படைப்புகளா? அல்லது உயிருக்கும் இறைவனுக்கும் தொடர்பின்றி ஊழ் படைத்த படைப்புகளா? இந்த வினாக்களுக்குத் தெளிந்த விடைகளைக் கண்டு கொள்ளாத வரையில் வாழ்க்கை மையலுறும். கலங்கும். நீடிய நல்லின்பங்கள் விளையா.

அன்புகூர்ந்து தெளிவாகச் சிந்தனை செய்யுங்கள்! திருக்குறள் உலகத்திலிருந்து சிந்தனை செய்யுங்கள்! திருவள்ளுவர் வழியில் சிந்தனை செய்யுங்கள்! வையத்தில் வாழ்வாங்கு வாழுங்கள்! இறைவன் அடி நினைத்து இன்புறுங்கள்!

வினை செய்தல் உயிரின் இயற்கை. கடமை. வினை செய்தலே உயிர் உய்தற்குரிய வழி. "எது எமைப் பணி கொளு மாறது கேட்போம்" என்று மணிமொழி பேசுகிறது.அப்பரடிகள் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்றார். ஆனால் எந்த வினையை எந்த அடிப்படையில், எந்த நோக்கத்தில் செய்வதென்பதே ஆய்வுக்குரியது.

தலையில் தண்ணீர்ப் பானையைத் தூக்கிக் கொண்டு ஒருவன் நடக்கிறான். பானை தானே ஆடி வீழ்வதில்லை. பானை ஆடவும் முடியாது. உடல் ஆட்டத்தினாலேயே பானை ஆடும். ஆனால் பானை ஆடி வீழ்ந்தது என்றே சொல்வர். காரணம் தன் உடல் ஆட்டத்தை மறைக்க வேண்டுமென்பதே. தண்ணீர்ப் பானையும் ஆடி விழாது. உடல் ஆடாமல் நடை பயிலக் கற்றுக்கொண்டால் தண்ணீர் சுமத்தலாகிய செயல் இனிய முறையில் நிகழும். அதுபோல் வினை செய்தல் இயற்கை. ஆனால் வினை செய்யும் பொழுது உள்ளத்தில் விருப்பு வெறுப்புகளாலாய கோணல் மாணல்கள் இருக்கக்கூடாது. செயல்களே ஊழாக வடிவம் பெற்று விடுவதில்லை. செயலுக்குரிய நோக்கமும். செயலால் விளையும் பயனும் பயனைக்கருதிய முறைமையும் ஊழின் தோற்றத்திற்குக் காரணங்களாகும்.

இறைவனைப் பூசித்தல் நற்செயலே. பூசை செய்தலாகிய செயலின் மூலம் நாம் இன்பமும் பெறலாம். துன்பமும் பெறலாம். இவ்விரண்டினும் உயர்ந்த அழிவின்பத்தையும் — அதாவது பேரின்பத்தையும் பெறலாம். இறைவனை, செல்வங்களை வேண்டிப் பூசை செய்யின் செல்வ விருப்பம் நல்லூழாக ஆகூழாகத் தோன்றிச் செல்வத்தைத் தரும்.

வாழ்க்கையின் விருப்பம் ஓர் அத்தியாயமாக நின்றுவிடுவதில்லை. வாழ்க்கையின் விருப்பம் பல அத்தியாயங்களாகத் தொடரும். ஏறும். விகார உணர்ச்சிகளால். பற்று — பாசங்களால் ஆகூழ். போகூழாக மாறிவிடுவதுண்டு. ஆகூழின் பயனாகிய செல்வத்தை அடைந்து அனுபவிக்கும்பொழுது. பற்றுவிடா உணர்ச்சியும். "எனது" என்ற இறுமாப்பு உணர்ச்சியும் இருத்தல் கூடாது.

மற்றவர்களுக்குத் தீங்கு செய்யக்கூடிய சக்திகளை வேண்டியும் பூசை செய்யலாம். இங்ஙனம் வேண்டிப் பெற்றவர்களே அசுரர்கள். தவத்தில் சுரர் என்றும். தன்மையினால் அசுரர் என்றும் உணர்த்தவே அசுரர் என்றார். இத்தகைய பூசையால் விளைவது தீயூழ். எதுவும் கருதாமல். இறைவனையே கருதிப் பூசித்தல் வினைச்சார்பற்றது. இன்பம் தருவது.

உயிர்கள் வினை செய்தல் இயற்கை வினை செய்தலே உய்தற்குரிய வழியாதலால் வினை செய்தலைத் தவிர்க்க முடியாது. தவிர்க்கவும் கூடாது. இறைவன் நன்றுடையான். தீயதில்லான். அவனுடைய படைப்புகள் இன்பம் விளைவிப்பனவாம். ஆதலால். நம்முடைய துன்பங்கலந்த இன்பங்களும் — துன்பங்களும் நம்முடைய படைப்புகளே தவிர இறைவனுடைய படைப்புகளல்ல.

நம்முடைய தலைவிதியை நாமே எழுதிக்கொள்கிறோம். கடவுள் நியதி என்ற முறையமைப்பில் அவரவர் தாம் செய்த விளைவுகளுக்கேற்ப வினைப்பயனை அனுபவிக்க வழி நடத்துகிறார். அதுவும் நம்மீதுள்ள கருணையினாலேயாம்.

பொருந்தா உணவை உண்டவர்கள் உண்டமையின் காரணமாக விளையும் துன்பத்தினை நீக்கிக் கொள்ள முயன்று வெளியெடுக்கும் வாந்தியைப்போல. அவரவர் செய்த வினைகளின் பயன்களை அவரவர்களே முயன்று அவரவர்களே அனுபவிக்க வேண்டுமென்பதே இயற்கையின் நியதி. இங்ஙனம். விருப்பு — வெறுப்புகளுடன் செய்யும் வினைகள் அனுபவத்துக்கு வராமல் போகா. அங்ஙனம் அனுபவத்துக்கு

வரும் பொழுது "ஊழ்" என்று பெயர் பெறுகிறது.

ஆர்வம் நிறைந்த முயற்சி, தளராத நெஞ்சம், நிலை கலங்காத உள்ளம் ஆகியவை ஆக்கும் ஊழாகிய ஆகூழின் அடையாளம். மாறாக, சோம்பிய உள்ளம், நெஞ்சில் நிதமும் கவலை, ஏங்கி இளைத்தல் ஆகியவை போகூழின் அடையாளம் என்று திருவள்ளுவர் அடையாளம் காட்டுகிறார்.

"ஆகூழால் தோன்றும் அசைவின்மை
கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி"

என்பது குறள்.

அறிந்திருந்தும், அறிவு வேலை செய்யாது. உணர்விருந்தும் உணர்வு கைகொடுக்காது. பேதைமைத் துறையில் அழைத்துச் செல்லும் இந்தச் சூழல், இழப்பு ஊழ் மேலோங்கி இருப்பதைக் காட்டுவது. அது போலவே, ஆகும் ஊழ் மேலோங்கியிருக்கும் காலத்தில் அறிவு பெருகும், ஆள்வினை தோன்றும், இதனை

"பேதை படுக்கும் இழவூழ், அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை"
என்று கூறி விளக்குகிறது, குறள்.

நுண்ணிய நூல்கள் பல கற்றாலும், கற்ற அளவுக்கு அறிவு மிகுந்து காணாமல் ஊழின்பாற்பட்ட குறைநலம் உடைய அறிவே மேம்பட்டு நிற்கும் என்று திருக்குறள் கூறுகிறது.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மை யறிவே மிகும்"

எனபது குறள்.

நூல் பல கற்றல் அறிவு பெறுதற்குரிய வழி, ஆயினும் கற்றதைச் சிந்தித்தலும் சிந்தனையில் தெளிவு பெறுதலும், துணிதலும் இயற்கையான ஊழொடு தொடர்புடைய உண்மை அறிவினாலேயே முடியும் என்பது திருக்குறள் முடிபு. ஆயினும் தன்னூழின் தரமறிந்து ஊழின் ஆற்றலை அடக்கக் கருதி அதனின்றும் விஞ்சிய தாகக் கற்றலும் கேட்டலுமுடையவர் சிறந்து விளங்குவர் என்பது குறள் கூறும்

கருத்து. இந்த உலகம். இருவேறு பெரும் பிரிவுகளாக இயங்குகிறது. ஒன்று பெருஞ் செல்வமுடையதாக விளங்கும் பிரிவு. பிறிதொன்று தெரிந்து தெளிந்த அறிவுடையவராக விளங்கும் பிரிவு. இந்த இரு பிரிவுகளும் தம்முள் மாறுபட்டே இருக்கின்றன. இது இயற்கையும் கூட எங்ஙனம் இயற்கையாகும்? அறிவை விரும்புபவர்கள் அறிவுத் துறையிலேயே முயன்று முயன்று. ஈடுபாட்டுடன் உழைக்கின்றனர். அவர்கள் கையில் ஏதாவது கொஞ்சம் செல்வம் கிடைத்தால்கூட. அந்தச் செல்வத்தையும் அறிவுக்காகவே செலவழித்துவிடுவர். இவர்கள் செல்வத்தைப் பேணார்கள். அறிவையே பேணுவார்கள். இது ஒருவகை. செல்வத்தையே பேணுவார்கள். சிந்தனை. செயல். தயை அனைத்தையும் செல்வத்தின் காலடியில் வீழ்த்திவிடுவர். இவர்களிடத்தில் செல்வமிருக்குமே தவிர அறிவு இருக்காது. இதனை. திருவள்ளுவர்

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு"

என்று கூறுகிறார். இந்த வேறுபாடு நீடிப்பதற்குக் காரணம் ஒவ்வொருவருக்கும் அவரவர் நினைப்பின்படி செயல்கள் தோன்றி. ஒவ்வொருவரிடத்தும் வளர்ந்து ஊழாக மாறுவதேயாம்.

மனிதனின் செயற்பாட்டுக்கு அடிப்படை அவனது சென்றகாலச் செயல்களின் விளைவாகிய ஊழேயாம். இழவூழ் வளர்ந்தமையின் காரணமாகத் தீமையைத் தீமையென்றுணரச் செய்யாமல் பேதைமைப்படுத்தும். இதன் காரணமாக நல்லவையாக இருப்பவையும் கூடத் தீமையாக மாறும். நல்லூழ் இருக்குமாயின் தீமையும் நன்மையாக மாறும்.

"நல்லவை யெல்லாந் தீயவாந் தீயவும்<br>நல்லவாம் செல்வம் செயற்கு"

என்பது குறள்.

ஊழ். உயிரை ஒட்டியிரக்கின்ற தத்துவம். உயிர் கடந்த காலச் செயல்முறைகளுக்கு ஏற்பப் பயன் பெற்று அனுபவிக்கும் இந்த முறையும் மரபும் வழி வழிப்பட்டதாகும். ஊழின்பாற் பட்டதல்லாத ஒன்று நாம் உரிமை கொண்டாடினாலும். நம்மிடம் தங்கிப் பயன் தராது.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல. உய்த்துச்

சொரியினும் போகா தம"

என்று கூறி இதனை விளக்குகிறது. குறள்.

அடுக்கிய கோடி செல்வம் பெற்றிருப்பினும் இன்புற்று வாழத் தெரியாதவர்களும் நிறையப் பேருண்டு. ஏன் இந்தக் குறை? என்று திருக்குறள் ஆராய்கிறது. முடிவாக,

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி

தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்று கூறுகிறது. இங்கு வகுத்தான் என்று குறிப்பிடுவது கடவுளையன்று கடவுள் பொதுவான இயல்புடையவர். ஆதலால், அவர் யாரொருவருக்கும் வலியச் சென்று தீமை செய்யார். எந்தவோர் உயிருக்கும் தீமை செய்யார். எந்தவோர் உயிருக்கும் தீமை நிகழ்வதற்கு உடன்படமாட்டார். ஒவ்வோர் உயிரும் சிந்தனையால், செயலால் செய்த செயல்களே பயன்தரும் வகையில், ஊழ் எனப் பெயர் பெற்று வருவது. இந்த ஊழினை உயிர்கள் அனுபவித்துக் கழித்துத் தாமே ஏற்றிக்கொண்ட சுமையினை இறக்கிக் கொள்வதற்கு, இறைவன் துணையாக இருக்கிறான் என்பதே உண்மை. இஷதன்றி நம்முடைய இன்ப துன்பங்களுக்குக் கடவுளோ ஊழோ காரணம் என்று காட்டுவது நெறியுமன்று முறையுமன்று. ஆதலால் வகுத்தான் என்பது நேரடியாக ஊழைக் குறிப்பிட்டாலும் அந்த ஊழினை உருவாக்கிக் கொண்ட மனிதனையே சாரும். இந்தக் குறளின் பொருளாவது, கோடானுகோடிப் பொருள்களைச் சேர்த்தாலும், ஊழின் வழியல்லது துய்த்து மகிழ முடியாது என்பதேயாகும். இந்தப் பிறப்பின் தொடக்ககாலத்திலோ அல்லது முன்பிறப்பிலோ ஒருவன்தான் துய்த்து அனுபவித்து மகிழாமல், வயிற்றையும் வாயையும் கட்டி, செல்வத்தை விரும்பிச் சேர்த்திருப்பானாகில் அவனுடைய ஊழ் சேர்க்கும் ஊழாக உருவாகுமே தவிர, துயத்து அனுபவிக்கும் ஊழாக வடிவம் கொள்ளாது என்பதே ஆகும். சிந்தனைச் செல்வழிச் செயல் நிகழும். ஊழ் உருவாவதற்கு அடிப்படை சிந்தனையும் நோக்கங்களு மேயாம். செயல்கள் மட்டும் ஆகா.

நல்லூழ் இன்மையின் காரணமாக நஞ்சினும் கொடிய வறுமையினை அடைந்து துய்ப்பன மகிழ்வன ஆகியவற்றை இழந்தவர்கள், ஊழினை மாற்றி அமைத்துக்கொள்ளத் தன் முயற்சி மேற்கொள்ளாது தவத்தினை நாடித் துறவியாவர். அப்பொழுது ஊழ்

வந்து ஊட்டாமலே கழியும். இம்முயற்சி ஒரோவழி நன்மையானாலும் ஆகலாம். ஆனாலும். ஊழினை மாற்றிக் கொள்ளும் முயற்சியே சிறப்புடையது.

மக்களில் பலர் இன்பம் என்றால் மகிழ்கின்றனர். துன்பம் என்றால் நடுங்குகின்றனர். புகழ் என்றால் விரும்பி ஏற்கின்றனர். இகழ்ச்சியென்றால் மறுக்கின்றனர். இஃது ஏன்? ஊழ் முற்றுப்புள்ளி பெறாது. சங்கிலித் தொடர்போல் தொடர்வதற்குக் காரணம். இன்பங் கண்டபொழுது மகிழ்தலும். துன்பங் கண்டபொழுது துவளுதலும் ஆகிய செயல்களினாலேயாம். நோய்க்கு உண்ணும் மருந்து சுவையால் இனிப்பாக இருந்தாலும் மருந்தேயாம். சுவை கருதி மருந்தை அதிகமாக உண்ணமாட்டார்கள். மருந்து கசந்தாலும் நோய் நீக்கம் கருதி உண்ணாமலிருக்க மாட்டார்கள். அதுபோல இன்ப துன்பங் களைத் தன்னுடைய செயல்களின் விளைவாகிய ஊழின் பயனே என்று கருதி. நொந்து நோகாமல். மகிழ்ந்து நெகிழாமல் மீண்டும். ஊழுக்கு உயிர் கொடுக்காமல் இரண்டையும் ஒப்பக் கருதி அனுபவிப்பதே ஊழினைக் கடக்கக்கூடிய ஒப்பற்ற வழி. இதனையே திருவள்ளுவர்.

"நன் றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால் அல்லற் படுவ தெவன்"

என்று கூறுகிறார்.

முடிவாகத் திருவள்ளுவர். "ஊழிற் பெருவலியாவுள?" என்றே கேட்கின்றார். ஊழினால் தமக்கு வந்துள்ள கேட்டினை மாற்றிக்கொள்ளப் பலருடனும் கூடிக் கலந்து பேசி. பல்லாற்றான் முயற்சி செய்தாலும் ஊழின் பயனை அனுபவிக்காமல் தப்பித்துக் கொள்ள முடியாது. இதனை.

"ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று சூழினும் தான்முந் துறும்"

என்றார். அப்படியானால் ஊழினை வெற்றி பெற முடியாதா என்ற வினா எழும். ஊழினை வெற்றி பெற முடியும். வாழ்க்கையின் நோக்கமே ஊழினை வெற்றி பெறுவதுதானே!

ஊழினை வெற்றி பெறுவதற்காகச் சூழ்ந்து செய்யும் வினைகள் மீண்டும் மீண்டும் ஊழாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அது எப்படி? ஊழினை அடக்குவேன். ஒடுக்குவேன். துன்பத்தை வெற்றி பெற்று இன்பங் கொள்வேன் என்று கருதி முயுன்றால். ஊழ் மீண்டும்

வலிமை பெற்றுத் தொடர்கிறது. அங்ஙனம் அல்லாமல் "இது என்னுடைய கடமை. செய்கிறேன். இதனால் ஆம் பயன்கள் பற்றிக் கவலையில்லை. பயன்கள் வந்தாலும் அவை எனக்குச் சொந்தமல்ல என்று செய்தால், ஊழ் கழிகின்ற அளவில் நின்று கொள்கிறது. தொடர்வதில்லை. சிந்தனைப் போக்குகளாலும், மற்றும் நம்மைச் சூழ்ந்திருக்கும் சூழல்களாலும் முன்னமே அமைந்துள்ள ஊழின் வலியினை அறிந்துகொண்டு, அதனை மாற்றக்கூடிய அளவுக்குக் கடமைகளின் பரிணாமம் அமையவேண்டும். நெருப்பைத் தண்ணீர் அணைக்கும். உண்மையே!

ஆனாலும், நெருப்பினுடைய அளவும் ஊற்றப் பெறும் தண்ணீரின் அளவும் இயல்பாக இருக்கவேண்டும். எரிகின்ற நெருப்பை ஒரு சொட்டுத் தண்ணீர் அணைக்க முடியுமா என்ன? தண்ணீர் அளவு கூடுதலாக வேண்டும். அதுபோலவே, முன்னைய ஊழின் வலிமையைக் கடப்பதற்கு ஏற்றவாறு முயற்சி அமைய வேண்டும். கருங்கல்லை உடைக்கக் கையின் வலிமை போதாத பொழுது, கடப்பாறையின் வலிமையையும் துணையாகச் சேர்த்துக் கொள்ளுகிறோம். அதுபோல ஊழின் வலிமையை மாற்ற நம்முடைய முயற்சி மட்டும் போதாது. நம்மினும் வலிமையுடைய மறந்தும் தவறு செய்யாத திருவருட்சார்பைத் துணையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதே ஊழினை வெற்றி பெற முடியும். ஊழினை வெற்றி கொள்வதென்றால், ஊழின் வழியதாக வரும் இன்பதுன்பத்தால் தாக்கப்பெறாமல் அலைக்கழிக்கப் பெறாமல் அனுபவிப்பது என்பதேயாகும்.

யாரொருவரும் அவரவர் உண்ட உணவை அவரவரே செரிக்கச் செய்து கொள்ள வேண்டும். இதுவே நியதி. அதுபோலவே யாரொருவரும் தாம் தாம் சிந்தனையால், உணர்வால், செயல்களால் செய்த செயல்களின் பயன்களை அனுபவிக்கவேண்டும். இங்ஙனம் அனுபவிக்க வேண்டுமென்ற நியதிதான் ஊழ் ஆகும். ஊழ் மனிதர்களாலேயே தோற்றுவிக்கப் பெற்றது. மனிதன் சிந்தனையால், உணர்வால், செயலால் உயர்ந்து தன்னலப் பற்றின்றிக் கடமைகளைச் செய்யும்பொழுது ஊழ் கழிகிறது ஊறுதியும் பயனும் விளைகிறது. அழிவில் இன்பம் தோன்றுகிறது. இதுவே திருக்குறள் உலகத்தின் கருத்து.

# கர்ப்பிணிப் பெண்களுக்கு
## சில யோசனைகள்...!

### 1. இரட்டைக் குழந்தைகள் எவ்வாறு உருவாகின்றன?

ஒரு விந்துவினால் உரமேற்றப்பட்ட ஒரு கரு முட்டை ஒரே சமமாக இரண்டாகப் பிரிந்து ஒரே மாதிரி தோற்றமளிக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. உருவம் ஒன்றாக இருந்தாலும் கை ரேகைகளில் மாற்றம் உண்டு. பிரியும் அளவுகளில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தால் சாயாமிஸ் இரட்டையர் உருவாகின்றனர். ஒரே சமயத்தில் ஒரு கருத்தரிப்பு ஏற்படும்போது வெவ்வேறு தோற்றமுள்ள இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன.

### 2. ஒரே தோற்றமுள்ள இரட்டைக் குழந்தைகளில் ஒன்று சிறியதாக இருப்பதேன்?

இரண்டு குழந்தைகளும் உணவிற்கு ஒரே பிள சண்டாவை நம்பியிருப்பதால் ஏற்படும் பிரச்னை இது சிறியதாக பிறக்கும் குழந்தை பிறந்த மூன்று மாதத்திற்குள் தேவையான வளர்ச்சியை பெற்று விடும்.

### 3. சில பெண்களுக்கு கருத்தரிப்பதற்கு மருந்துகள் தேவை படுகின்றன. ஏன்?

சில பெண்களுக்கு ஆரோக்கியமான சினைகள் இருந்தாலும் கருமுட்டை சரியாக தோன்றுவதில்லை. குறைவான ஹார்மோன்கள் தான் இதற்கு காரணம். பிட்யூடரி சுரப்பி தேவையான அளவு ஹார்மோன்களை சுரக்க இந்த மருந்துக்கள் வழிசெய்கின்றன.

### 4."செயற்கை முறை கருத்தரித்தல்" என்பது என்ன?

ஏதோ சில காரணங்களினால் ஆணின் விந்து பெண்ணின் உடலை இயற்கையான வழியில் அடையமுடியாவிடில் சுலபமாக ஒரு இன்ஜெக்சன் குழாய் மூலம் அதை பெண்ணின் உடலில் உட்செலுத்த முடியும்.

### 5. ரத்த சம்பந்த் உறவினர்களுக்குள் திருமணம் செய்து கொள்வது சரியா?

குடும்பத்தில் முன்னோர்களின் உடல்நிலை நோய் நொடி இல்லாத பாரம்பரியமாக இருந்தால் தாராளமாக செய்து கொள்ளலாம்.

### 6. கருத்தடை சாதனங்கள் உபயோகிப்பதால் மலட்டுத் தன்மை ஏற்பட வழியுண்டா?

பெண்களுக்கு 35 வயதிற்கு மேல் கருத்தரிக்கும் சக்தி குறையும். அந்த வயதில் முதல் குழந்தை உருவாவது சற்று கடினம். பொதுவாக கருத்தடை மாத்திரைகளின் பாதிப்பு பெண்களின் உடலில் அதை நிறுத்திய ஆறு மாதத்திற்கு மேல் இருப்பதில்லை.

### 7. கருத்தடை சாதனங்களை பயன்படுத்தும் பெண்கள் அதை நிறுத்திய பின் எத்தனை மாதங்களில் கருத்தரிக்க முடியும்?

அது அந்த பெண்ணின் வயதைப் பொறுத்தது.

### 8. பெண்கள் கருத்தரிக்க சரியான வயது எது?

இருபது முதல் இருபத்தைந்து வயதிற்குள் முதல்குழந்தை பெற்றுக் கொள்ளலாம். 35 வயதிற்குமேல் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

### 9. பேறு காலத்தை நிர்ணயிப்பது எப்படி?

கடைசி மாத விலக்கின் முதல் நாளிலிருந்து 40 வாரங்கள் கூட்டிக் கொள்ள வேண்டும். அந்த தேதியிலிருந்து இரண்டு வாரங்கள் முன்னாலோ பின்னாலோ குழந்தை பிறப்பை எதுர்பார்க்கலாம்.

### 10. மாதவிலக்கு தவறுவதுதான் கருத்தரிப்பின் அடையாளமா?

கருத்தரிப்பின் முதல் அறிகுறி அதுதான் ஆனால் சில சமயங்களில் உடலில் ஏற்படும் ரத்த சோகையினாலும், மனநிலையில் ஏற்படும் சில மாற்றங்களினாலும் மாதவிலக்கு தவறுவதற்கு வாய்ப்புண்டு.

### 11. கருத்தரிப்பின் மற்ற அடையாளங்கள் என்ன?

கருத்தரிப்பின்போது மார்பகங்கள் சற்று மாறுபடுகின்றது. மார்பகங்கள் நன்கு திரண்டு லேசான நிறமாற்றத்துடன் காணப்படுகின்றன.

## 12. சிறுநீரைக் கொண்டு கருத்தரிப்பை ஊர்ஜிதம் செய்கிறார்களே. எப்படி?

பெண்ணின் உடலிலுள்ள அதிகமான ஹார் மோன்கள் சிறுநீர் மூலம் வெளியேற்றப்படுகின்றன. ஒரு சிறு ரசாயன பரிசோதனையின் மூலம் அதைக் கண்டுபிடித்து விடலாம்.

## 13. எக்டோபிக் கர்ப்பம் என்பது என்ன?

சுகமான கருப்பையில் வளர வேண்டிய சிசுடியூபுகளில் வளர ஆரம்பிப்பதை குறிப்பது இது.

## 14. "அகுபாண்டம் பிரக்னன்ஸி" என்பது...?

தனக்கு ஒரு குழந்தை பிறக்கவேண்டும் என்ற வெறியுள்ள பெண்களுக்கு கர்ப்பமடைந்த பெண்களின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் ஏற்படும். ஆயினும் அது உண்மையான கர்ப்பமல்ல. இந்த நிலையை ஸ்கேன் செய்வதன் மூலம் மிக சுலபமாக கண்டுகொள்ளலாம்.

## 15. கருக்கலைப்பு எவ்வாறு ஏற்படுகிறது?

இதற்கு பல காரணங்கள் உண்டு. தாயின் உடல் அந்த கருவை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். கரு சரியான வளர்ச்சி இல்லாமல் முதல் மூன்று மாதங்களில் தானே கலைந்து விடுவதும் உண்டு. தாயின் உடலில் சுரக்கும் ஹார்மோன்கள் கருமுட்டையை சரியாக பராமரிக்காவிட்டாலும் அந்த கரு கலைந்து விடும். கருப்பை தன் வாயை இறுக மூடிக்கொண்டு கருவை தன்னுள் தக்க வைத்துக்கொள்ளாமல் இருக்கலாம். அந்த சமயங்களில் கருப்பையைத் தைத்து அந்த கருவை காப்பாற்ற இயலும்.

## 16. மருத்துவ சோதனைகளை எப்போது ஆரம்பிக்க வேண்டும்?"

தாயாகப் போகிறோமோ என்ற சந்தேகம் தோன்றியவுடன் ஆரம்பிக்க வேண்டும்.

## 17. அப்போது என்ன செய்யப்படுகின்றது?

உடல்முழுவதுமாக பரிசோதிக்கப்படுகிறது. மேலும் ரத்தப் பரிசோதனையுடன் உடலின் எடையும் கவனமாக கண்காணிக்கப்படுகின்றது.

**18. கர்ப்பிணிகள் அம்மை குத்திக் கொண்டு தடுப்பு ஊசிகள் போட்டுக்கொள்ளலாமா?**

அவரவர்களின் தேவையை வைத்து நிர்ணயிக்கப் படவேண்டிய விஷயம் இது.

**19. பிரயாணம் மேற்கொள்ளலாமா?**

ரயிலிலும், கார்களிலும் கடைசி சில வாரங்கள் வரை பயணம் செய்யலாம். 9 மாத கர்ப்பிணியை ஏற்றிச் செல்ல எந்த விமானக் கம்பெனியும் முன்வருவதில்லை.

**20. கரி. அடுப்புச் சாம்பல் சாப்பிட ஆர்வம் உண்டாவது ஏன்?**

இந்த காலத்தில் அம்மாதிரி சாப்பிடும் பெண்கள் மிகக் குறைவு. சரி விகித உணவு சாப்பிடுவதிலேயே அதிக அக்கறை செலுத்துகின்றனர். உடலுக்கு தேவையான இரும்புச் சத்து குறைவதால் இம்மாதிரி சாப்பிட எண்ணம் தோன்றுவதாக ஒரு கருத்து உண்டு. ஆனால் அது நிரூபிக்கப்படவில்லை.

**21. பால்வினை நோய் உள்ளவர்களுக்கு பிறக்கும் குழந்தை பாதிக்கப்படுமா?**

பால்வினை நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படாவிடில் மலட்டுத் தன்மை ஏற்பட வாய்ப்புண்டு. முறையான சிகிச்சை மேற்கொண்டு குழந்தைக்கு பாதுகாப்பு அளிப்பது நல்லது.

**22. கர்ப்ப காலத்தில் வாந்தி எடுப்பது ஏன்?**

பல ஆராய்ச்சிகள் மேற்கொண்டு இதற்கு சரியான காரணம் தெருயவில்லை. சாதாரணமாக 3 மாதங்களில் வாந்தி நின்று விடும்.

**23. வயிற்றில் குழந்தை எப்போது அசைய ஆரம்பிக்கிறது?**

18 இல் இருந்து 20 வாரங்களுக்குள் பட்டாம் பூச்சி பறப்பதுபோல ஓர் உணர்வு ஏற்படும்.

**24. குழந்தையின் அசைவு நின்று விட்டால்?**

பலமணி நேரங்களுக்கு குழந்தை நகராமலே இருக்கக்கூடும். குழந்தை வளர அதற்கு அதிகமாக அசைவதற்கு இடம் இருக்காது. ஆனால் ஒரு நாள் முழுவதும் அசையாவிடில் மருத்துவரை நாடுங்கள்.

**25. குழந்தை சரியான வளர்ச்சியுடன் உள்ளதா என்று எப்படி அறிந்து கொள்வது?**

மாதா மாதம் செக்—அப் செய்து கொண்டாலே தெரிந்து விடும். சந்தேகம் இருப்பின் ஸ்கேன் செய்து பார்த்துக்கொள்ளலாம்.

**26. வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு ஏற்பட்டிருக்கும் நோய்களை ப்பற்றியும். அந்தக் குழந்தைகளை பற்றியும் அறிந்து கொள்ள முடியுமா?**

சில பரிசோதனைகள் மூலம் அறிய முடியும்.

**27. தாய் ஒல்லியாகவும். தகப்பம் குண்டாகவும் இருந்தால் குழந்தை பெரிதாக இருக்குமா? பேறு காலத்தில் கஷ்டம் ஏற்படுமா?**

இல்லை. அநேகமாக சாதாரண அளவில்தான் குழந்தைகள் பிறக்கின்றன.

**28. சில பெண்கள் அதிகமாக ஊதி விடுகிறார்களே?**

உடலில் சேர்ந்துள்ள தண்ணீரின் அளவு அதிகமாக இருப்பதால் ஏற்படும் விளைவு இது.

**29. வேலை செய்வதை எப்போது நிறுத்த வேண்டும்?**

அவரவருடைய உடல்நிலையை பொறுத்தது அது.

**30. அதிகமான தூக்கம் அவசியமா?**

இல்லை. உடலே இக்கேள்விக்கு பதிலளிக்கும் பாதங்கள். முதுகு வலி ஏற்படுவது ஏன். சுமக்கும் கனத்தை தாங்கும் சக்தி இல்லாததால் ஏற்படுகிந்றது.

**31. குழந்தை பேற்றிற்கு பிறகு உடலின் தோற்றம் மாறுமா?**

இல்லை. ஆனால் இது பாரம்பரிய அம்சங்களையும், ஹார்மோன்களின் சமநிலையையும் பொறுத்தது.

**32. வயிற்றில் ஏற்படும் கோடுகளை தடுக்க வழியுண்டா?**

குழந்தை பிறந்தவுடன் இக்கோடுகள் தானாக மறைந்துவிடும். ஆனால் குழந்தை பேற்றிற்கு பிறகு உடலின் எடையில் அதிக கவனம் தேவை.

**33. ஒவ்வொரு குழந்தைக்கும் தாயின் பல் ஒன்று விழுந்து விடுமா?**

இல்லை.

**34. வறண்ட தோல், முடி இவற்றை எப்படி சமாளிப்பது?**

காட்லிவர் எண்ணெய் உபயோகியுங்கள்.

**35. அடிக்கடி வயிறு கடினமாக ஆவதேன்?**

கர்ப்பகாலம் முழுவதும் 20 நிமிடத்திற்கு ஒரு முறை சுருங்கி விரிவதனால் கடினமாகிறது. கவலை ஒன்றுமில்லை.

**36. உடலுறவு குழந்தையை பாதிக்குமா?**

நிச்சயம் பாதிக்காது. குழந்தை வளர வளர கணவன், மனைவி இருவரும் தங்கள் உடலுறவு கொள்ளும் நிலைகளை மாற்றிக் கொள்வது நல்லது.

**37. வீட்டில் பிரசவம் வைத்துக்கொள்ளலாமா?**

மருத்துவமனைகளில் வைத்துக் கொள்வதே நல்லது. தவிர வீட்டில் வைத்துக்கொள்வதென்றால் எவ்வளவு விஷயங்கள் தயார்

செய்ய வேண்டும். யோசித்துப்பாருங்கள்.

### 38. பேறு வலி ஆரம்பித்து விட்டது என்பதை எப்படி தெரிந்து கொள்வது?

பனிக்குடம் உடைந்து நீர் வெளியேற்றம் அதிகமாக இருக்கும். முதுகின் அடியில் ஆரம்பித்து சீரான இடைவெளியில் வலி அடி வயிற்றை நோக்கி நகரும் சாதாரணமாக சில சமயங்களில் முதல் பேற்றின்போது வேறு ஏதாவது வலியைக்கூட பிரசவ வலி என்று தவறாக நினைத்துக் கொள்வதும் உண்டு.

### 39. பிரசவ வலியைப் பற்றி சில விபரங்கள் தர முடியுமா?

இந்த வலி மூன்று நிலைகளில் ஏற்படுகிறது. முதல் நிலை கருப்பையின் வாய் குழந்தை பிறப்பதற்கு ஏதுவாக திறந்து கொள்வது. குழந்தை பிறப்பது இரண்டாவது நிலை. "பிளௌசண்டா வெளிவருவது மூன்றாவது நிலை.

### 40. இயற்கையான பிரசவம் என்பது என்ன?

மருந்துகள். ஆயுதங்கள் உதவியின்றி தாயே தன்னுடைய வலியை சீராக்கி குழந்தை பிறப்பது தான் இது.

### 41. சில பெண்களுக்கு தையல் போடுவதன் அவசியமென்ன?

குழந்தை கஷ்டமின்றி வெளி வருவதற்கு ஏற்றவாறு தாயின் தோல் தாறுமாறாக கிழிவதை தடுக்கவும் தோல் சீராக கிழிக்கப்பட்டு பிறகு தையல்கள் போடப்படுகின்றது.

### 42. பிரசவ சமயத்தில் கணவன் உடனிருக்கலாமா?

மனைவி படும் கஷ்டம் அவருக்கும்தான் சற்று தெரியட்டுமே!

### 43. சில சமயங்களில் பிரசவ வலியை செயற்கை முறையில் ஏற்படுத்துவது ஏன்?

குழந்தை பிறப்பதற்கு எல்லா குறிகளும் தென்பட்டு தாய்க்கு குழந்தை பிறப்பதற்கு போதிய வழி கிடைக்காவிட்டாலும். தாய் நீரிழிவு. ரத்தம் போன்ற வைகளினால் பாதிக்கப்பட்டாலும் வலியை செயற்கையாக

உண்டு பண்ணுகின்றனர்.

**44. குழந்தை வெளிவர வழி உண்டாக்கப்படுகிறது?**

பனிக்குடம் உடையவும், பிரசவ வலி ஏற்படவும் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

**45. அதன் பிறகு பிரசவம் சாதாரணமாக இருக்குமா?**
இருக்கும்.

**46. "சிசேரியன்" என்றால் என்ன?**

அறுவை சிகிச்சை மூலம் குழந்தையை தாயின் கருப்பையிலிருந்து எடுக்கும் முறை இது.

**47. சிசேரியனுக்கு எப்போது அவசியம் ஏற்படுகிறது?**

தாயின் இடுப்பு மிகவும் குறுகியதாக இருந்தாலும் அல்லது பாதிக்கப்பட்டிருந்தாலும் இயற்கை பிரசவம் மிகவும் சிரமமாக இருக்கும். குழந்தை மிகப் பெரிதாக இருந்தாலும் அறுவை சிகிச்சை மூலம் பிரசவிக்கச் செய்வது அவசியப்படும்.

**48. ஆயுதங்கள் உபயோகிக்கக்காரணம் என்ன?**

தற்காலத்தில் ஆயுதங்கள் பிரசவவலியின் இரண்டாவது நிலையில்தான் உபயோகப்படுத்தப்படுகின்றன. குழந்தையின் பிறப்பை சுலபமாக ஆக்க இது உதவுகிறது.

**49. பிரசவத்துக்குப் பிறகு உதிரப் போக்கு எத்தனை நாட்கள் நீடிக்கும்?**
சாதாரணமாக 3 வாரம் இருக்கும்.

**50. நமது உடல்நிலை பழைய நிலையை அடைவது எப்போது?**
கருப்பை பழைய நிலைக்குச் சுருங்க 2 மாதங்கள் ஆகும்.

**51. பிரசவ வலி எவ்வளவு கடுமையானது?**
அது அவரவர்களின் பொறுத்துக்கொள்ளும் சக்தியைப் பொறுத்தது. வலி மிகவும் அதிகமாக இருந்தால் டாக்டர்களே

உங்களுக்கு மருந்துகள் கொடுப்பார்கள்.

**52. பிரசவத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் படுக்கையில் இருக்கவேண்டும்?**

குறைந்தது 24 மணிநேரம்.

**53. குழந்தை நீலமாக சில சமயங்களில் பிறப்பது ஏன்?**

குழந்தை வெளிவரும் தருவாயில் அதற்கு வேண்டிய பிராணவாயு கிடைக்காவிடில் குழந்தை நீலமாக பிறக்கிறது. பிறந்த சிறிது நேரத்தில் அதன் இயற்கை நிறம் திரும்பிவிடும்.

**54. பிறந்தவுடனேயே அந்த குழந்தை சரியாக உள்ளதா என்று தெரிந்து விடுமா?**

பிறந்தவுடனேயே எல்லா குழந்தைகளும் பரிசோதிக்கப்படுகின்றன.

**55. பிறந்த குழந்தையின் தலை சில சமயங்களில் கோணலாக இருப்பதேன்?**

குழந்தை தலை பிறக்கும்போது மிகவும் மிருதுவாக இருக்கும். குழந்தை வெளிவரும்போது சில காரணங்களில்தான் தலை சற்று உருமாறலாம். அது சில நாட்களில் நேராகிவிடும்.

**56. கர்ப்பிணி பெண்களுக்கு கால் வீங்குவதேன்?**

வேண்டிய அளவு நீர் வெளியேறாவிட்டால் கால் வீங்கலாம். ஏழு அல்லது எட்டு மாதங்களுக்கு பிறகு குழந்தையின் சுமை தாங்காமலும் வீங்கலாம்.

**57. தாய் சாப்பிடும் வைட்டமின் மருந்துகள் குழந்தையை அதிகமாக வளரச் செய்யுமா?**

இல்லை. வைட்டமின் மருந்துகளுடன் ஒழுங்காக உணவையும் உட்கொள்வது முக்கியம்.

**58. "ரிலஸ் பேபி" என்றால் என்ன?**

கணவனின் ரத்தத்தில் ஆர். எச். அம்சம் பாஸிடிவ் வாகவும் மனைவிக்கு நெகட்டிவாகவும் இருக்கும் பட்சத்தில் குழந்தை தந்தையைக்கொண்டு பாஸிட்டிவாக இருக்கலாம். அப்போது தாயின் உடல் அதை எதிர்க்கும் குழந்தை பிறந்தவுடனேயே அல்லது கருப்பையில் இருக்கும் போதோ அக்குழந்தைக்கு ரத்தம் ஏற்ற வேண்டும்.

**59. குழந்தை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே பிறந்தால் ஆபத்தா?**

குறிப்பிட்ட காலத்திற்கு 2 வாரம் முன் பிறந்தால் அல்லது அதனுடைய எடை இரண்டரை கிலோவிற்கு கீழே இருந்தால் அதை மிகவும் கவனமாக பாதுகாக்க வேண்டும்.

**60. குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு பிறந்தால்?**

குறிப்பிட்ட காலத்திற்கு பிறகும் குழந்தை வயிற்றிலேயே இருக்குமானால் "பிளசண்டா" குழந்தைக்கு வேண்டிய உணவை கொடுக்க முடியாது. அப்படிப்பட்ட சமயங்களில் வெளிக்கொணர மருத்துவர்களே ஏற்பாடு செய்து விடுவார்கள்.

**61. குழந்தைக்கு தாய்ப்பால் எப்போது கொடுக்க ஆரம்பிக்கலாம்?**

பிறந்த சில மணி நேரங்களில்.

**62. குழந்தைக்கு தாய்ப்பால் கட்டாயம் கொடுக்க வேண்டுமா?**

கட்டாயமில்லை ஆனால் குழந்தைக்கு சிறந்த உணவு தாய்ப்பாலேதான்.

**63. தாய்ப்பால் கொடுக்காவிடில் சுரக்கும் பால் என்னவாகும்?**

தாய்பால் தானாக சில நாட்களில் காய்ந்து விடும் அதுவரை இறுக்கமான உள்ளாடை அணிய வேண்டும். மார்பகங்கள் புண்ணானால் மருத்துவரை நாடுங்கள்.

**64. மார்பகங்கள் சிறிதாக இருந்தால் பால் குறைவாக சுரக்குமா?**

தாய்ப்பால் சுரப்பது தாயின் உடலிலுள்ள ஹார்மோன்களின் அளவை பொறுத்தது. மார்பகத்தின் அளவையல்ல.

**65. பிறந்த சில நாட்களில் குழந்தையின் எடை குறைந்து விடுவதேன்?**

குழந்தையின் உடலிருந்து நீரும் தேவையற்ற கழிவுப் பொருட்களும் வெளிவருவதால்.

**66. குழந்தை பிறந்த எத்தனை நாட்களில் மீண்டும் உடலுறவு கொள்ளலாம்?**

ஆறிலிருந்து எட்டுவாரத்துக்குள்.

**67. தாய்ப்பால் கொடுப்பது கருத்தடை சாதனமாகப் பயன்படுமா?**

இல்லை. பயன்படாது.

**68. கருத்தடை மாத்திரைகளை எப்போது ஆரம்பிக்க வேண்டும்?**

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் நிலையில் இருப்பவர்கள் குறைந்த வீரியமுள்ள மாத்திரைகளை குழந்தை பிறந்த 5 வாரத்தில் ஆரம்பிக்கலாம்.

**69. பிரசவமான சில நாட்களில் சில தாய்மார்கள் மனத் தளர்ச்சியுடன் காணப்படுவதேன்?**

பிரவசமாகி மூன்றாவது அல்லது நான்காவது நாளில் சில பேர் கண்ணீர்விடும் அளவிற்கு மனம்தளருவார்கள். திரும்பவும் ஹார்மோன்களின் அளவுதான் அதற்கு காரணம்.

**70. அடுத்த குழந்தை பெற்றுக்கொள்ள சிறந்த காலம் எது?**

இரண்டு குழந்தைகளையும் ஒன்றாக சேர்த்து வளர்த்து விடலாம் என்ற எண்ணமுள்ளவர்கள் உடனே பெற்றுக் கொள்கிறார்கள் மற்றவர்கள் சில வருடங்கள் கழித்து பெற்றுக்கொள்கிறார்கள்.

# "இந்து சமயமும் பெண்களும்"

— டாக்டர் தவத்திரு சாயிமாதா

யார் இந்து?

ஹிந்து என்ற சொல்லுக்கு பொருள் — ஹிம் — பிறர் ஹிம்ஸை துக்கம். து — என்றால் போக்குவது.

பிறர் துக்கம் போக்குறவன் ஹிந்து. இந்து சமயத்தின் இரு கண்கள் சைவம் — வைணவம் ஆகும்.

இதிலே வைணவ பெரியவராக விளங்கியவர் இராமனுஜர். இவரது காலத்தில் சிநேகிதர் ஒருவர் இராமானுஜரிடம் வந்து. "ஐயா! இராமானுஜரே! காயம்பட்ட — புண்பட்ட ஒருவனைக் கண்டால் நீவிர் வருத்தப்படுவீரோ?" என்று கேட்டாராம்.

அதற்கு இராமானுஜர். "காயம்பட்ட — புண்பட்ட ஒருவனைக் கண்டால் நான் வருத்தப்பட மாட்டேன் என்றார்.

"காயம்பட்ட — புண்பட்ட ஒருவனைக் காண்டால் நீவிர். வேதனைப்பட மாட்டீரா?

"வேதனையும் படமாட்டேன்"

"காயம்பட்ட — புண்பட்ட ஒருவனைக் கண்டால் நீவிர் கலக்கமடைய மாட்டீரா?

"கலக்கம் அடையவும் மாட்டேன்" இதனைக் கேட்ட நண்பர். ஓய்! இராமனுஜரே! நீரா பெரிய இரக்கத்தின் இருப்பிடம்? நீ பெரய ஸ்ரீ வைணஷ்வர்?" என்று ஏசினாராம்.

அதற்கு இராமனுஜர். ஆழ்ந்த பெருமூச்சொன்று விட்டுக் கொண்டு சொல்கிறார் — "காயம்பட்ட — புண்பட்ட ஒருவனைக் கண்டால் நான்

வருத்தப்பட மாட்டேன். வேதனைப்பட மாட்டேன். கலக்கம் அடையவும் மாட்டேன்..... ஆனால் அந்தக் காயம் பட்டவனாகவே நான் ஆகிவிடுவேன்" என்றார்.

இதனை வள்ளுவரும்.

"அறிவினால் ஆவதுண்டோ
பிறிதின் நோய் தன்நோய்போல் ஆற்றாக்கடை"

என்றும் கூறினார். உலகத் துயர்கண்டு அதனைத் தன் துயராக எண்ணியவர்கள் — எண்ணுபவர்கள் இந்துக்கள்.

கால வரையரை

சங்க காலத்தில் — சங்கப் புலவர்களோடு 36 பெண்கள் இருந்து சங்கத் தமிழாக்கியிருக்கிறார்கள். இரண்டாயிரத்தைநூறு ஆண்டுகட்கு முன்னர் நாலாயிரம் ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் சங்கத் தமிழ் காலம். அடுத்து மற்றும் பல புராணங்களிலே. பெண்கள் தெய்வங்களாகவே போற்றப்பெறும் பல காட்சிகளை நாம் காணலாம்.

இடையிலே. சித்தர் காலத்திலே பெண்ணைத் தெய்வமாகப் போற்றாமல் கொஞ்சம் அவதூறாக இழித்தும். பழித்தும் பேசப்பட்ட நிலை ஏற்பட்டது.

பாரதகாலம். மகாகவி பாரதியார் தம் பாக்கள் மூலமாக. பெண்களுக்குள்ள பெருமைகளை நிலைநாட்டினார்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன் மண்ணுக்குள்ளே சில மாந்தர் நல்ல மாதர் அறிவினைக் கெடுத்திட்டார்" என்றும். பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.

"எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"
என்று ஏற்றிப் போற்றியதோடு.

"சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்" என்று பாடி. பெண்ணுக்குள்ள பெருமையினை விளக்குகின்றார். பெண்ணென்றால் பேசுந் தெய்வம். பெரிய கோவில்

பெற்றெடுத்த தாயகம்.

சாத்திரத்தில் பெண்கள் வேதகாலம். இக்காலத்தில் கார்க்கி மைத்ரேயி போன்ற மாது சிரோண்மணிகள் தோன்றி "தர்க்க அரசி" என்ற பட்டங்களை எல்லாம் பெற்று வேதத்திலே தேர்ச்சி விளங்கியிருக்கிறார்கள்.

இதற்கடுத்த காலம் — இதிகாச காலம்.

மகாபாரதம் — இராமாயணம் இரண்டும் இந்துக்களுக்கு இரு மூக்குகளிலிருந்து உண்டாகும் மூச்சுகளாகும். உயிர் நாடிகளாக விளங்கிய இதிகாச காலத்திலே, மகாபாரதம், இராமாயணம் இரண்டிலும் வருகின்ற பல பெண்கள் தெய்வங்களாக மதிக்கப் பெற்றனர்.

இவற்றை அடுத்துப் புராணகாலம். இப்புராண காலத்திலே — பெரிய புராணத்திலே அறுபது நாயன்மார்களோடு மூன்று பெண்களும் சேர்ந்து 63 நாயன்மார்களாக விளங்குகின்றனர். ஒருவர் — காரைக்காலம்மையார் — அடுத்தவர் மங்கையர்க்கரசியார் மூன்றாவது — இசைஞானியார். பெண்ணின் பெருமை மிக அருமையாக சாத்திர தோத்திரங்களும் உணர்த்துகின்றன.

"பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்"

சிவபெருமான், உமையை ஒரு பக்கத்தில் வைத்துக்கொள்ள, மகாவிஷ்ணு லஷ்மியை நெஞ்சில் வைக்க, பிரும்மா சரஸ்வதியைத் தன் நாவில் நடமாடவிட இப்படியாகத் தெய்வங்களே மங்கயர்களை மதித்தமையை உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# மணிக்கரங்கள்

ஆலயமணி சமய சஞ்சிகையின் தேவையும் பார்வையும் பல சைவத்தமிழ் அன்பர்களை அதன் அபிமானிகள் ஆக்கியிருப்பதை யறிந்து மகிழ்ச்சியடைகிறோம். ரொறன்ரோவிலும் மொன்றியாலிலும் எம்மைக்கண்டவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துப் பல ஆலோசனைகளையும் வழங்கினார்கள் முடிந்த அளவு ஆதரவு தருவதாகச் சொன்னார்கள்.

விளம்பரங்கள் அதிகமில்லாமல் விடய தானங்களை வெளியிட்டு சைவத்தமிழ் பாரம்பரிய ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் வளர்க்கும் படி வேண்டினார்கள். சஞ்சிகையின் தயாரிப்புச் செலவுகள் குறித்துப்புதிய யோசனைகளைத் தெரிவித்தார்கள்.

அதிலே முதன்மையானது ஒவ்வொரு இதழ் செலவுக்கும் தம்மால் இயன்ற உதவியை செய்வதென்பதாகும் அந்த உதவிக்கரங்களை நாம் மணிக்கரங்களாய் வரவேற்று எங்கள் கரங்களால் வணங்குகிறோம். வணக்கம் தானே எங்கள் வாழ்க்கையின் முதல் பணி.

ஒரு சிவாச்சாரியாரும் இரு சிவ நெறியாளரும் இங்கே இணைந்துள்ளார்கள். இவர்களுக்கு ஆலயமணியின் நல்வாழ்த்துக்கள் என்றும் உண்டு. இவர்களைப் போல் இன்னும் பலர் ஆலயமணியின் வருகைக்கு உதவி ஊக்குவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**இதோ அந்த மணிக்கரங்களின் மனிதர்கள்**

***சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக்குருக்கள்***
***(ரொறன்ரோ)***

***திருமிகு— வேலாயுதபிள்ளை றமேஷன்***
***(மொன்றியால்)***

***திருமிகு— கனக —மகேந்திரன்***
***(ரொறன்ரோ)***

***இப்பட்டியலில் இன்னும் பல மணிக்கரங்கள் இணையவேண்டி மாதொரு பாகனைப் பிரார்த்திக்கின்றேன்.***
***வணக்கம்.***

***சிவ — சிவமோகன்***
***(கனடா— பதிப்பாசிரியர்)***

முன்இதழ்த் தொடர்....!

# "தில்லைச் சிந்து"

— கவிஞர் வி. கந்தவனம்

## 3. யாத்திரை

வாருங்கள் வாருங்கள் செல்வோம் — பெரு
வள்ளலின் பேரின்ப வார்கழல் கொள்வோம்
சேருங்கள் சென்று விரைந்தே — உயர்
தில்லையம் பலத்தினில் ஒன்றி நிறைந்தே.

செல்கின்ற வழிமிக்கத் தூரம் — அதைச்
சிந்தையில் சிறிதாக்கும் ஈசனின் பாரம்
அல்லல்கள் வழியிடை யில்லை — ஐயன்
அன்பருக் கேதிந்த அவனியில் தொல்லை.

செங்கதிர் தண்ணருள் பெய்வான் — வாயு
தென்றல் வழங்கி இதம்பல செய்வான்
பங்கமில் யாத்திரை வாரீர் — அப்பன்
பசி, களை தாராது காத்தருள் வாரே.

மந்தைகள் மேய்வதைப் பாரீர் — அந்த
வகையிலே மனங்களை ஒருவழி சேரீர்
சிந்தையும் செய்கையும் ஒன்றாம் — சிவ
சிந்தனை வந்திடின் யாவுமே ஒன்றாம்.

பசுக்களின் அமைதியைப் பாரீர் — புல்லைப்
பாலாக மாற்றிடும் பரிசையும் தேரீர்
பசுக்குணம் பதிக்குண மாக — மாறிப்
பதிகையில் பக்குவப் பாலூற லாகும்.

ஆடுகள் போலத் தடித்தே — மனம்
அதிலொன் றும் இதிலொன்று மாகக் கடித்தால்
வீடுசென் றடைவதும் என்றோ — பழ
வெவ்வினை விலகியே கெடுவதும் என்றோ?

நாய்க்கொரு சேலையு மில்லை — எனின்
நடப்பதற்கும் பாவம் நேரமும் இல்லை
ஆய்க்கினை ஏன்படு கின்றீர் — அவன்
அருளினை ஏன்பெறத் தாமதிக் கின்றீர்?

யாத்திரி கருக்கென்று பேணி — பாலை
அன்பர் மோராக்கியே தரநிற்றல் காணீர்
பாத்திரம் பலதாங்கும் பால்போல் — கோலம்
பலபூண்டு தொண்டாற்றும் அன்பவர் தன்மேல்.

அழுக்கையுண் டமைகின்ற காக்கை — நீருக்
கலைந்தோடி மூழ்கியே கழுவிடும் யாக்கை
அழுக்காறு அவாபோன்ற பொய்ம்மை — யாவும்
அகலிடம் தில்லையம் பலமுண்மை யுண்மை.

கூவுமோர் சேவலைக் கேளீர் — பிற
சேவல்கள் கேட்டதைத் தொடருதல் கேளீர்
தேவரின் அடியவர்க் கெல்லாம் — சென்று
தெரிவித்தல் யாத்திரை நங்கடன் நல்லீர்!

**அடுத்த இதழில் தொடரும்....!**

# தமிழ் முருகன்

— த. மாணிக்கவாசகர் (நாதன்)

தமிழ் கூறும் நல்உலகில் பண்டைய தமிழர்களின் தனிப்பெரும் தெய்வமாக முருகப் பெருமானை வணங்குவதற்கு பல காரணங்கள் உண்டு. முருகு என்றால் அழகு என்று பொருள் முருகனை அழகுத் தெய்வம் என்று தமிழர்கள் பெருமையுடன் அழைப்பர். காரணம் பரம் பொருளாயிருக்கும் இறைவன் மற்றொரு வடிவில் காரியமாக இருப்பது கோட்பாடு. அதனால் தான் பிரபஞ்சம் முழுவதுமே அழகு வடிவம் எடுத்து இருப்பது வெளிப்படை. அதனால்த் தான் முருகனை அழகுத் தெய்வம் என தமிழர்கள் அழைக்கக் காரணம்.

முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் ஆறு செந்தாமரை மலர்களில் ஆறு முகங்களுடன் பார்வதி. பரமேஸ்வரர் சமேதர்களினால் உருவாக்கப்பட்டவர். ஆறு முகங்களுடன் தோற்று விக்கப்பட்டதினால் ஆறுமுகன் என்றும் அழைப்பார். தமிழிலும் வல்லினம் ஆறு. இடையினம் ஆறு. முருகன் பன்னி இரண்டு தோள்களை உடையவன். தமிழில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு பதின் எண் கண்களை உடையவன் முருகன் தமிழில் மெய் எழுத்துக்கள் பதின்எட்டு.

வேறு எந்த இந்து தெய்வங்களின் திருக்கரங்களிலும் இல்லாத வேலாயுதம் முருகன் திருக்கரத்தில் மாத்திரம் இருக்கிறது. இந்த பரந்த பூவுலகில் பேசப்படுகின்ற எழுதப் படுகின்ற மொழிகளில் இல்லாத ஆயுத எழுத்து தமிழ் மொழியில் மாத்திரம் தான் உண்டு அதனால் தான் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து உலகின் மூத்த மொழி தமிழ் மொழி என்று சொல்லப்படுகின்றது. இச்சை கிரியை ஞானம் என்று சொல்லப்படுகின்ற. மூன்று தன்மைகளை தன்னகத்தே உள்ளடக்கிய ஃ மூன்று புள்ளிகளாகிய ஆயுத எழுத்தைக் குறிக்கின்றன. முருகனுக்கு தமிழ் நாட்டில் பல ஆயிரக்கணக்கான கோவில்கள் இருக்கின்றன. ஆனால் முக்கியமாக காட்சி கொடுத்து அருளிய திருத் தலங்களில் ஆறு மிகவும் பிரசித்தமானவை. அவையாவன திருச் செந்தூர். சுவாமிமலை. பழனி. திருவேரகம். குன்று தோறாடல். பழமுதிர் சோலை என்பனவாகும். அதே போல் முருகனின் சிறப்புப் பெற்ற பல திருத்தலங்கள் இலங்கையிலும் இருக்கின்றன. நல்லூர் — முருகன். திருக்கோவில் முருகன். கதிர்காமக் கந்தன். செல்வச்சன்நிதி முருகன். கந்தவனக் கடவை . மண்டூர் முருகன். மாவிட்டபுரக் கந்தன். புங்குடுதீவில் கிராஞ்சியம்பதி முருகன். மடத்து

வெளி முருகன் என பலநூற்றுக்கணக்கான முருகன் ஆலயங்கள் இருக்கின்றன மற்றும் உலகில் தமிழர்கள் வாழும் இடம் எல்லாம் முருகன் ஆலயங்கள் இருக்கின்றன. தென் ஆபிரிக்காவில் டர்பன் நகரில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசினரால் தேசிய நினைவுச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட வள்ளி. தெய்வானை சமோதராய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொண்டெழுந்தருளி ஆபிரிக்கா வாழ் தமிழ் மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் அருளாட்சி கொடுக்கின்றார். சுமார் ஐநூறு. அறுநூறு வருடங்களுக்கு முன் உலகம் பூராவும் பரந்து வாழும் தமிழர்களாலும். பாரத புண்ணிய பூமியில் தமிழ் நாடு செய்த நற்தவத்தினாலும் அருணகிரிநாதர் பிறந்தார். இவர் மிகவும் சிறுவயதில் இருந்தே தீராத நோயினால் கஷ்டப்பட்டு பல துன்பங்களையும் இன்னல்களையும் அனுபவித்து நோயின் கொடுமை தாங்கமுடியாமல். தமிழ் நாட்டில் வல்லாள மன்னனின் அரண்மனைக் கோபுரத்தின் உச்சியில் ஏறி தன் இன் உயிரை போக்கிக் கொள்ள வீழ்ந்தார் இவரின் இச் செயலை முருகப் பெருமான் தன் ஞானக் கண்ணால் அறிந்து குருவாகத் தோன்றி தனது திருக்கரத்தால் ஏந்தி. சும்மா இரு சொல்லற என்ற மௌனத் திரு மறையை உபதேசித்து மறைந்தருளினார்.

முருகப் பெருமான் ஒருமுறை. மூவருந் தேவர்களும் காணதவகையில் மயில்மீது அமர்ந்து அவர்முன் காட்சி கொடுத்தருளினார். செந்தமிழ்ச் செல்வன் முருகன். அருணகிரிநாதரின் நாவில். இச்சை. கிரியை ஞானம் பொருந்திய வேலாயுதத்தின் அடிப்பாகத்தினால் பிரணவ மந்திரத்தை எழுதி. முத்தி என்று முதல் அடி எடுத்துக் கொடுத்து அழகு தமிழில் பாடும்படி அவருக்கு சகல கலா வல்லமையையும் கொடுத்தருளினார். அவரது நாவில் கரைபுரண்டோடும் வெள்ளம் போல் தமிழ் ஞான வெள்ளம் பெருக் கெடுத்து ஓடத்தொடங்கியது. ஒருமுறை முருகப் பெருமான் அசரீரியாக வயலூருக்கு வரும்படி கூறியருளினார். அருணகிரிநாதர் முருகனின் அழைப்பின் பேரில் வயலூருக்கு சென்று சக்த தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வணங்கி ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களுமாக அவருக்கு காட்சி கொடுத்து திருப்புகழை தொடர்ந்து பாடும்படி திருவாய் மலர்ந்து அருளினார். முருகப் பெருமானுக்கு பதின் ஆறு சிறப்புவடிவங்கள் உண்டு. குமரன். சரவணன். காத்திகேயன். ஆறுமுகன். கந்தசாமி. பாலசுப்பிரமணியன். தேவசேனாதிபதி. வள்ளி மணாளன். களிற்றுார் திப்பெருமாள். சுப்பிரமணியன். சசிவாசனார். ஞானச்சந்திரன். தாரகாந்தர். பிரமசாக்தன். சிரவுஞ்சபேதனர். சேனாதிபதி என்பனவாகும். முருகப் பெருமானை சுமந்து நிற்கும் மயிலை பலவாறு அழைப்பார்கள். பிரணவ எழுத்தான ஓங்காரமே ஆடும்பரி—மயிலாக வந்து முருகனை சுமப்பதாகவும்.

தெய்வேந்திரன் முருகனை சுமக்க மயிலாக வந்ததாகவும். இருக்கு யசுர் சாமம். 'அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் சுமக்க மயிலாக வந்ததாகவும். கூறுவர்.

முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய். சேவற் கொடியும். வேலாயுதத்தையும் தன் திருக்கரத்தில் கொண்டவராய் விளங்கும் திருக்கோலம்பல தத்துவங்களை கொண்டன வாய் விளங்குகின்றன. முருகன் என்ற அழகு சொல்லில் வல்லின இடையின. மெல்லின சொற்கள் பொதிந்து காணப்படுகின்றன. அவையாவன முறையே. வல்லினம். முருகனையும். இரு மெல்லினம். வள்ளி. தெய்வயானையையும் இடையினம் முருகனின் திருக்கரத்தில் பிடித்த வேலையும் நினைவு படுத்துகின்றன. முருகனின் ஆறு திருமுகங்கள் ஆறு பேறுகளைக் குறிக்கின்றன அவையாவன: ஐஸ்வரியம். வைராக்கியம். வீரியம். ஞானம். திருப்புகழ் என்பனவாகும். முருகன் ஆறு முகங்களுடன் சூரனை வதைத்தது. திருவேல் கையில் தாங்கியது வள்ளி. தெய்வயானை இருவர்களையும் மணந்தது போன்ற உண்மைகளை கந்தர் கலி வெண்பா. நக்கீரர் திரு முருகாற்றுப்படை. குமார தந்திரம். கந்தரலங்காரம். கந்தரனுபூதி முதலியனவற்றில் காணலாம்.

முருகப் பெருமானுக்கு முக்கிய விரத நாட்கள். வெள்ளிக் கிழமை. கார்த்திகை விரதம். கந்த சஷ்டி விரதம் ஆகியனவையாகும். கந்த சஷ்டி முருகனுக்கு மிகவும் பிடித்த விரதமாகும். முருகப் பெருமானை கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்து வணங்கி துதிப்போருக்கு வல்வினைநீங்கி துன்பம் போகும் அவன் திரு நாமத்தை எந்நாளும் நெஞ்சிற் பதிப்போர்கு செல்வம் பெருகும். நிஷ்டைகை கூடும். சஷ்டி நாளில் பெண்கள் விரதம் அனுஷ்டித்தால் அகப்பையான கருப்பையில் மக்கட் பேறு என்னும் செல்வம் தோன்றும். அறிவும் ஆற்றலும் அழகும் வாய்ந்த நல் மக்கட் பேறு கிடைக்கும். எனவே தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தமிழர் தமிழர்களே. தமிழர்களாகிய நாம் நம் பிள்ளைகளுக்கு. எங்கள் கலை. கலாச்சாரத்தை சொல்லி கொடுப்பதுடன் எங்கள் சமயகோட்பாடுகள். பண்பாடுகள் முதலியனவற்றையும் விளங்கப்படுத்தி தேனினும் இனிய மொழியான அழகு தமிழ் மொழியை கட்டாயம் வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழ்க் குழந்தைகளும் கற்றுவரின் எல்லாம் வல்ல தமிழ்க் கடவுளாம் முருகனின் அருள் கிடைக்கும்.

# கம்பர் காட்டும் நீலகண்டர்

—வித்துவான் சு. சுவர்ணகாளீச்சுவரன்

முழுமுதல் கண்ணுதல்

கம்பநாடர் ஆளுடை நாயகனாகிய இராமபிரானை நமக்கு அறிவித்துக் கொண்டு போகும் பொழுதே, நீறுதோய் வனிதையோர் கூறினனாகிய, தேவதேவனாகிய சிவபெருமானை நினைவுறுத்தத் தவறவில்லை. அப்பெருமானது மழுவாயுதம் போன்று இருந்தது. அனுமன் அசோகவனத்தில் பஞ்ச சேனாபதியர்களை வெல்வதற்காக ஒடித்த மரக்கொம்பு எனக் காட்டுகின்றார். இங்கு சிவபெருமானைப் புகழ்வதற்கு எவ்விதச் சந்தர்ப்பமும் இல்லை. ஆயினும் தானே இங்கு அனுமன் கோவிலிலிருக்கும் கொம்பிற்குச் சிவபெருமான் மழுவினைக்காட்டிச் சிவபெருமானைப் புகழத் தொடங்கிவிடுகின்றார். அந்த முழு முருகன் தாதையும் நுதல்விழி நாட்டத்திறையவனும் ஆகிய முழுமுதற் பொருள் எனப் போற்றுகின்றார். இதனை அவர் வாக்கினைக் கொண்டே அறிவோம்.

"முழுமுதல் கண்ணுதல் முருகன் தாதை கைம் மழுவெனப் பொலிந்தொளிர் வயிரவான் தனிஎழு"

"பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி"

இத்தகைய பரம் பொருள் பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி என்பதனையும் கம்பநாடார் விசுவாமித்திரர் இராமனுக்குச் சிவபெருமான் யோகஞ்செய்த காமனாச்சிரமத்தினைக் காட்டும் பொழுது அவ்விசுவாமித்திரர் வாக்காகவே நமக்குக் காட்டுகின்றார். இங்கு யோகுசெய்த சிவபெருமான் எத்தகையவன் தெரியுமா?

"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய் உற்றவா லுணர்வு முடுகினாருடைய அறிவு யாரிடம் செல்லுமோ அப்பெருமானாகும். மேலும் அம்முனிவர் வாக்கினாலேயே 'நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்து எனக் காட்டியவர், சீதாபிராட்டி இராவணனை நோக்கிச் கூறும் வாக்காக 'குன்றுநீ எடுத்தநாள் சேவடிக் கொழுதால் நின்னைவென்றவன்' எனக் காட்டுகின்றார்.

சேயிழை பாகத்தெண்டோள் ஒருவன்

அனுமன் சஞ்சீவி பர்வதத்தினை எடுக்கச் செல்லுகையில் "அஞ்சுகதிர் முகக் கமலம் காட்டி. தூய பேருலக மூன்றும் தூவிய மலரிற் சூழ்ந்த சேயிழை பாகத் தெண்டோள் ஒருவனாகிய சிவபெருமானை வணக்கஞ் செய்த நிகழ்ச்சியினை நமக்குக் கூறுவதன் மூலமாகச் சிவபெருமானது ஐந்து திருமுகப் பெருமையையும் அப்பெருமானை மூவுலகம் ஏத்துவதையும் நமக்குக் காட்டுகின்றார்.

## நீறணிந்த கடவுள்

நீறணிந்த கடவுள் நிறத்தவாகிய வெண்மேகம், மங்கைதன் வீறணிந்த மேனியின் மீண்ட திறத்தினையும், நமக்குக் காட்டுவதோடல்லாமல் "துனியுறு செம்மணித் தூணம்" நீறுதோய் வனிதையோர் கூறினன் வடிவுகாட்டும் திறத்தினையும் நமக்குக் கம்பர் காட்டும் பண்பு பாராட்டற்பாலது.

## தமிழ் தந்த தலைவன்

தமிழைத் தந்த பெருமையே சிவபெருமானைத்தான் சேரும் என்பதனை அகத்தியரை நமக்கு அறிமுகப்படுத்தும் பொழுது "நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண் தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழைத் தந்தவன்" எனக் கூறுகின்றார்.

## நடம்புரியும் பெருமான்

மேலும் வானை நோக்கிய கம்பர் எண்ணரிய மறையினோடு கின்னரர்கள் இசைபாட, உலகம் ஏத்த விண்ணவரும் முனிவர்களும் வேதியரும் கரம்குவிப்ப வேலை என்னும் மண்ணுமணி முழவதிர வானரங்கின் நடம் புரியும் கண்ணுதற் பெருமான் சடையை விரித்த காட்சியைக் காணுகின்றார்.

## நீலகண்டன்

இராமாயணப் பகுதியில் எவ்வெவ்விடங்களில் மற்றையோர் அஞ்சிவந்து சரணடைய இராமன் அபயமளிக்கின்றானோ அப்பகுதிக் கெல்லாம் பாற்கடலில் ஆலகால விடம் வரத் தேவர்கள் அஞ்சி ஓடிச் சிவபெருமானை அடைய நஞ்சுண்டு கருணைபுரிந்ததையே உவமையாக எடுத்துக் காட்டுந் தன்மையினைக் காணுந்தோறும் நம் உள்ளம் வியப்புக் கடலில் ஆழ்கின்றது.

பாலகாண்டத்தில் விசுவாமித்திரரது வேள்வியை அழிக்கவந்த மாரீசன் சுபாகுவைக் கண்டு முனிவர்கள் அஞ்சி இராமனிடம் சரணடைந்தமை பாற்கடலில் நஞ்சு தோன்றியபோது தேவர்கள் சிவபெருமானைச் சரணடைந்த நிலைமையை ஒத்திருந்தது எனக் காட்டுகின்றார்.

மேலும் கிஷ்கிந்தா காண்டத்தில் வாலிக்குப் பயந்து மதங்க முனிவராச்சிரமத்தருகே தங்கியிருந்த சுக்கிரீவன் முதலானோர் இராம இலக்குமணரைக் கண்டு வாலி அனுப்பிய வீரர்களெனக் கருதி அஞ்சியோட அனுமன் மட்டும் தனித்து ஓடாது நின்ற காட்சிக்கு ஆலகால விடத்தினைக் கண்டு தேவர்களெல்லாம் அஞ்சியோடத் தான் மட்டும் ஓடாது நின்ற சிவபெருமானை உவமையாகக் காட்டுகின்றார்.

பின் அவ்வனுமன் இராமபிரானது நற்றொடர்பினை அடைந்து சுக்கிரீவனை நட்பாக்க அழைக்கும் பொழுது ஆலமுண்டவன் எவ்வாறு நடமாடுவானோ அவ்வாறு கூத்தாடிக் கொண்டே வாலிக்குக் காலன் வந்தனன் எனப் பாடுகின்றார்.

விபீஷணன் சரணாகதியடைய அதனைக் கண்டஞ்சிய வானரர்களை நோக்கி அன்று பாற்கடல் கடைந்தவருக்காக ஆலமுண்டதைக் கேட்க வில்லையா? அந்தணர்க்காக அந்நாள்காலனைக் காய்ந்த மேன்மையைவிட மேன்மையுண்டா? ஆகையால் சரணடைந்த விபீஷணனை ஏற்றுக் கொள்வேன் என இராமபிரான் கூறுவதனைத் தெரிவிக்கும் கம்பநாடர். சுக்கிரீவன் இராமனது ஆணையை விபீஷணரிடம் தெரிவித்தபோது "பஞ்சென சிவக்குமென்கால் தேவியைப் பிரிந்த பாவி வஞ்சனுக்குத் தம்பியான என்னையும் வருகவெனப் பணித்தானா" தாழ்சடைக் கடவுளுண்ட நஞ்செனா நான் சிறந்தேன்" என்று விபீஷணன் கூறிய செய்தியையும் காட்டுகின்றார். மேலும் யுத்தகாண்டத்தில் இராவணனைச் சென்று தாக்கும் சுக்கிரீவன் வீரத்தினைக் குறிக்கும் பொழுது ஆலமன்று வரநின்ற சிவனைக் கம்பநாடர் நமது நினைவுக்குக் கொண்டு வருகின்றார்.

இராவணனது மூலப்படைகண்டு தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டமையைக் கூறும்பொழுதும். அப்பெருமான் அரக்கர் குலமெல்லாம் பொன்றுவிப்பதோர் விதிதந்தனமெனக் கூறும் பொழுதும். சிவபிரானை நஞ்சடை கண்டன். மணிமிடற்றிறைவன் என்றே காட்டுகின்றார்.

# பிரிந்தவர் கூடினால்

— பேராசிரியர் ஜெ. ஆர். ஜெயச்சந்திரன்

எறும்புகளும் தேனீக்களும் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. அவற்றைப் போன்று சேர்ந்து வாழும் இயல்பு மனிதனுக்கும் உள்ளது. ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழும் வாழ்க்கையிலிருந்து உலகம் முழுதுமுள்ள மக்கள் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கை வரை, புலவர் பெரு மக்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். அவை காலத்தால் அழியாத கவினுறு காட்சிகளாக விளங்குகின்றன.

தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்கின்றனர். பின்னர் பிரிவு நேர்கிறது. பிரிந்து சென்றவர்கள் மீண்டும் சந்திக்கின்றனர். அவ்வாறு அவர்கள் மீண்டும் சந்திக்கும் போது எதைப் பேசவேண்டுமென்று சந்திப்பதற்குமன் நினைத்தார்களோ அதைப் பேச முடிவதில்லை. ஏன்? அந்த எண்ணமே ஏற்படுவதில்லை. தலைவியொருத்தி பிரிந்து சென்ற தலைவனோடு ஊடுதற்காகச் சென்றாள். ஆனால் அவளுடைய நெஞ்சமோ அந்த நோக்கத்தையே மறந்து தலைவனொடு கூடுதற்காகச் சென்றது.

'ஊடற்கண் சென்றேன்மன் தோழி அது மறந்து
கூடற்கண் சென்றது என் நெஞ்சு'

— குறள்

தலைவனைக் காணாதபோது அவனுடைய குற்றத்தைக் கண்டவள் அவனைக் கண்டபோது அவனுடைய குற்றத்தை நினைக்காமல் மறந்துவிடுகிறாள்.

எழுதுங்கால் கோல்காணாக்
கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து

இதுவரை தலைவியின் நிலை கண்டோம். இனித் தலைவன் தலைவி ஆகிய இருவரையும் காண்போம்.

திருக்கயிலையில் மலர்வனத்திடையே சேடியர் இருவரிடம் ஆலாலசுந்தரர் அன்பு செலுத்த, சிவபெருமான் அவர்களைத் தென் திசையிற்போந்து அவதரிக்குமாறு ஆணையிட்டார். ஆலாலசுந்தரர் ஆரூரராகவும் சேடியர்கள் பரவையாராகவும் சங்கிலியாராகவும்

அவதரித்தனர். ஆரூரர் திருவெண்ணய் நல்லூரிலிருந்து இறைவன் திருவருளால் திருவாரூரை அடைந்து தியாகேசப் பெருமானை வழிபட்டு வருவாராயினர். திருவாரூரில் தோன்றிய பரவையாரும் நாள்தோறும் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். ஒரு நாள் ஆரூரர் கோயிலினின்றும் வரும்போது வழிபடச் சென்ற பரவையாரைக் கண்டனர். கண்டவுடன், 'கற்பக மரத்தினது பூக்களோடு கூடிய கொம்போ? மன்மதன் தனது பெரிய வாழ்வாய்க் கொண்ட பொருளோ? அழகு என்னும் பொருள் செய்த புண்ணியத்தின் பயனாய் விளைந்த புண்ணிய விளைவோ? மேகத்தை மேலே சுமந்து கொண்டும் வில்லையும், நீலோற்பல மலரையும், பவளத்தையும், தாமரையையும், நிலவையும் அழகு பெற அங்கங்களாகக் கொண்டும் விளங்குகின்ற மணம் வீசும் கொடியோ? அற்புதப் பொருளோ? இறைவனது திருவருள்தானோ? இது இன்னதென்று அறியேன் என (கூறவில்லை) அதிசயித்து நின்றார்.

'கற்பகத்தின் பூங்கொம்போ?
காமன்றன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ?
அறியே னென்றதி சயித்தார்.

**(பெ — புராணம்)**

இவ்வாறு அதிசயித்து நின்ற ஆருரரைப் பரவையாருங் கண்டார். பேரொளியோடு விளங்கும் அவருடைய நோக்குடன் பரவையாரின் நோக்கும் கலந்தது. மனத்தில் ஒரு புதுவிருப்பம் தோன்றியது. அந்தநிலையில் பரவையார் 'என் முன்னே பேரொளிப் பிழம்பாய்த் தானாகவே வந்து தோன்றும் முருகப் பெருமானோ? தன் நிகரில்லாத மன்மதனோ? வாடா மாலையணிந்த விஞ்சையர்களி லொருவனோ? மின்னலையொத்த செஞ்சடையுடைய சிவபிரானின் மெய்யருளைப் பெற்றவனோ? என்னுடைய மனத்தை மயக்கிய இவன் யாவனோ? என்று பலவும் நினைத்தார்.

'முன்னே வந்தெதிர்தோன்று
முருகனோ? பெருகொளியாற்
றன்னேரின் மாரனோ?
தார்மார்பின் விஞ்சையனோ?

மின்னேர் செஞ்சடை யண்ணல்
மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே யென்மனந்திரித்தவிவன்
யாரோ? வென நினைந்தார்

**(பெ — புராணம்)**

இவ்வாறு சேக்கிழார் பெருமான் பிரிந்தவர் கூடியதைத் தமக்கேயுரிய சிறப்போடும் நயத்தோடும் எடுத்துரைக்கின்றார். அவர்கள் இருவரும் வாய் திறந்து ஒரு சொல்கூடப் பேசவில்லை. அவர்கள் மனத்திலே எழுந்த எண்ண அலைகளைப் படம் பிடித்துக்காட்டி அவர்கள் நிலையை விளக்குகின்றார் சேக்கிழார். திருப்பாற் கடலிலே அரவணையில் சேர்ந்திருந்த திருமாலும் திருமகளும் இராமனாகவும் சீதையாகவும் அவதரித்தனர். விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச் சென்ற இராமனும் இலக்குவனும் அங்கு பல காட்சிகளைக் கண்டனர். அரண்மனையிலுள்ள கன்னி மாடத்தின் வழியாகச் சென்றபோது அங்கு நின்ற சீதையை இராமன் கண்டான். பேரழகுப் பிழம்பாகச் சீதை நின்றபோது ஒருவர் கண்ணிணையோடு மற்றொருவர் கண்ணிணைப் பற்றி ஒன்றையொன்று கவர்ந்து அனுபவிக்கவும் இருவருடைய அறிவும் தத்தமிடங்களிலே நிலைபெற்றிராமல் ஒற்றுமைப்படவும் (இருவர் மனவுணர்ச்சியும் ஒன்று பட்டு ஒரு தன்மைத்தான காதலைக் கொள்ள) இராமனும் சீதையைப் பார்த்தான். சீதையும் இராமனைப் பார்த்தாள்.

'எண்ணரு நலத்தினா
ளினைய னின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை
கவ்வி யொன்றையொன்று
உண்ணவு நிலைபெறா
துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா
னவளு நோக்கினாள்'

**(கம்பராமாயணம்)**

தம்முள் ஒருவரழகை ஒருவர் விழுங்கிய கண் பார்வையென்னும் கயிற்றினாற் கட்டி ஒருவரை மற்றொருவரது மனம் இழுத்தலினால் வில்லையுடைய ஆடவரிற் சிறந்த இராமன். வாள்போலுங் கண்களையுடைய மகளிரிற் சிறந்த சீதை என்னும் இவ்விருவரும் ஒருவர் மனத்தை ஒருவர் மாறிப் புகுந்து அடைந்தார்கள்.

'பருகிய நோக்கெனும்
பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர்த
முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும்
வாட்கணங்கையும்
இருவரும் மாறிப்
புக்கிதய மெய்தினார்'

(கம்பராமாயணம்)

நுண்ணிய இடையையுடைய சீதையும் குற்றமற்ற இராமனும் ஒருவர் மேலொருவர் கொண்ட மிக்க அன்பினால் ஒன்றுபட்ட இரண்டு உடம்புகளுக்கு ஒருயி ரென்னும் படியானார்கள். திருப்பாற்கடலிலே அனந்தசயனத்திலே ஒருவரோடொருவர் கூடியிருந்த கூட்டம் நீங்கித் தனித்தனியாகப் பிரிந்து போனவர்கள் மீண்டும் ஓரிடத்திற் கூடினால். அவர்கள் மனத்திலே எழும் அன்பை வாய்விட்டுச் சொல்லவும் வேண்டுமோ? எனக் கம்பர் கேட்கின்றார்.

மருங்கிலா நங்கையும்
வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற்
குயிரொன்றாயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவி
நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல்
வேண்டுமோ?

(கம்பராமாயணம்)

# கந்தபுராணம் காட்டும்
## கற்போரும் கற்ப்பிப்போரும்

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்
— க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ. எல். டி

கந்தபுராணத்தில் முதற்கண் திருக்கயிலை மலையில் ஆலமர நிழலில் ஓர் உயர்நிலைவகுப்பு நடைபெறுகிறது. அவ்வகுப்பில் மாணவர்கள் நால்வர்களே. அவர்கள் வேதங்களையும், வேதத்திற்குத் துணையாக உள்ள நூல்களையும் நன்கு கற்றவர்கள். கற்றதோடமையாது பலரோடும் கலந்து ஆராயும் கேள்வியிலும் வல்லவர்கள்.

'சினமிறக்கக் கற்றாலுஞ்
சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு
வாய் ஏன் பராபரமே"

என்னும் கொள்கையுடையவர்கள். மனம் இறக்கக் கற்கவேண்டும் என்று சிவபிரானிடத்தில் வேண்டுகிறார்கள். இறைவனும் உடன்பட்டுக் கல்லால் மர நிழலில் தெற்கு முகமாக எழுந்தருளியிருந்து உரைக்கின்றார். முன்னர், இறை, உயிர், தளை என்னும் பொருள்கள் பற்றிய உண்மைகளை கூறுகிறார். இவற்றைக் கேட்ட முனிவர்கள் தங்கள் உள்ளம் ஒடுங்கவில்லை என முறையிடுகிறார்கள். அப்பொழுது முதல்வன், ஞானபோதகம் சொல் நடையன்று எனவுரைத்து, மோன முத்திரை அத்தனாய் அவர்களை நோக்கிச் சும்மா இருக்கிறார். மாணவர்கள், சிந்தை ஒடுங்கி, ஆனந்தமயமான ஒளி தங்கள் உள்ளத்தில் நிறைந்து விளங்குதலை உணர்கிறார்கள். இதுவே உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வாகும். இங்கு நிகழ்ந்த ஞானமே கலைஞானமும், அனுபவ ஞானமுமாகும். இதுவே, சித்தாந்த ஞானம் எனவும் படும். சைவ சமயம் குரவர்களாலும் சந்தான குரவர்களாலும் தோத்திரம், சாத்திரம் என்பவற்றின் மூலம் தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட மிகவுயர்ந்த முடிநிலை மெய்யுணர்வும் இதுவே ஆகும்.

இவ்வுணர்வு விளங்குமிடத்தில் காமம், வெகுளி, மயக்கம்,

என்னும் முக்குற்றங்களின் நாமமும் கெடும். இறைவனது மோன நிலையை மாற்றக்கருதிச் சென்ற மன்மதன் நீறுபட்டு அழிந்தான் என்னும் வரலாறு இதனை விளக்குகின்றதல்லவா?

இவ்வுயர்நிலை வகுப்பில் கற்று மெய்ப் பொருள் கண்ட நால்வர்களில் ஒருவர் சனற்குமாரர். இவரே எல்லா நூல்களையும். கலைகளையும் உணர்ந்த நாரதருக்கு பூமி வித்தையை உணர்த்தி அவரை இருளைக் கடப்பித்தார் எனச் சாந்தோக்கிய உபநிடதம் ஏழாம் அத்தியாயத்தில் கூறுகிறது. மேலும். அவ்வுபநிடதம். "அவரைக் கந்தன்" என்று சொல்லுகிறார்கள். எனக்கூறி முடித்தலின். இவரே நம் தமிழகத்தில் திரு ஞானசம்பந்தராக ஏழாம் நூற்றாண்டில் எழுந்தருளியிருந்து ஞானத் தமிழைக் கொடுத்தருளினார் எனக் கொள்வது பொருத்தமாக உள்ளது.

இனி. கந்தபுராணத்தில் இரண்டாம் காண்டமாகிய அசுர காண்டத்தில் ஒரு தொடக்கப்பள்ளி நடக்கிறது. இதில் காசிப முனிவரே ஆசிரியர் அவர் மறை தெரிந்த முனிவர். மாயை என்னும் அசுரகுலப்பெண் அவரை மணந்து பல பிள்ளைகளைப் பெறுகிறாள். அசுர குலம் வளர்ந்து ஓங்க வேண்டும் என்பது அவள் கருத்து. அவள் பெற்ற பிள்ளைகளுள் தலைமையானவர்கள் மூவர். அவர்கள் சூரன். சிங்கமுகன். தாரகன் என்னும் பெயரினர். இவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று மாயை முனிவரை வேண்டினாள். அவரும் உடன்பட்டுப் பாடஞ் சொல்லத் தொடங்கினார்.

"சான்றவர் ஆய்த்திடத்
தக்க ஆம் பொருள்
மூன்றுள். மறையெலாம்
மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி.
ஆருயிர்த் தொகை
வான்திகழ் தளையென
வகுப்பர் அன்னவே"
எனத் தொடங்கினார்.

பிள்ளைகளே! காணப்படும் இவ்வுலகம் உள்ளது. உடம்பு உள்ளது. உடம்பில் மெய். வாய். கண் முதலிய கருவிகள் உள்ளன. உலகில் நம்மால் நுகரப்படும் பொருள்கள் உள்ளன. இந்நான்கும் தோன்றி மறையும் காரியப் பொருள்கள். இவற்றிற்குக் காரணமாய். அருவாய். எங்கும் நிறைந்ததாய் உள்ள ஒரு சக்தி உண்டு. அது

மாயை எனப்படும். இம்மாயையின் காரியங்களால்தான் நமக்கு அறிவு விளங்குகிறது. அறிவு விளங்காதபோது நமக்கு உள்ள அறியாமையைச் செய்வது ஆணவம் எனப்படும். நாம் அறிவு விளங்கி உலகப் பொருள்களை நுகர்ந்து வரும்போது இன்ப துன்பங்களை நுகர்கின்றோம். அவை தாமே வருவன அல்ல. நாம் முன்முன் பிறப்புக்களில் செய்துவந்த வினைகளே அவற்றை நமக்கு உண்டாக்குகின்றன. மாயை, ஆணவம், வினை என்பன நம்மைக் கட்டுப்படுத்துகின்ற தளைகளாகும். இவற்றால் கட்டுப்பட்டு அறிவும் அறியாமையும், நினைவும் மறப்பும், இன்பமும் துன்பமும் பெற்று வருகின்ற நாம் உயிர்கள். நமக்கு இந்த உடம்பைக் கொடுத்து உலகத்தையும் கொடுத்து நம் அறிவை வளரச் செய்கின்ற முதல்வன் ஒருவன் இருக்கின்றான். அவன் பிறப்பற்றவன். அவனை நாம் உணரும்போது இத்தளைகளின் நீங்கிப் பேரின்பத்தை அடைவோம். இம்மூன்று பொருள்களையும் அறிவால் நிறைந்தவர்கள் ஆராய்கிறார்கள் என்று பாடம் தொடங்கிற்று. இப்பாடத்தைக் கேட்டபோது ஒன்றும் புரியாமையால் மூத்தவனும், இளையவனும் உறங்கத் தொடங்கினார்கள். ஆசிரியர் இப்பாடம் இவர்களுக்குக் கடினம், என்றுணர்ந்து, திருக்குறளின் அறத்துப்பாலையாவது சுருக்கிச் சொல்லலாம் என்று சொல்லத் தொடங்கினார்.

"தருமமே போற்றிடின்
அன்பு சார்ந்திடும்,
அருளெனும் குழவியும்
அணையும், ஆங்கவை
வருவழித் தவம் எனும்
மாட்சி எய்துமேல்
தெருள் உறும் அவ்வுயிர்
சிவனைச் சேருமால்"

என்றுகூறி விரித்துரைக்கத் தொடங்கினார். அப்பொழுது நன்னய மாயை நகைத்துக் கூறுவாள், நீர் மறைதெரிந்த முனிவர், நீர் கூறுவன உறுதியே. ஆனாலும் அவற்றை அறிவு மிகுந்த முனிவர்களுக்கே கூறவேண்டும். நம் சிறுவருக்கு இப்பாடங்கள் பொருத்தமானவையல்ல" என்றாள்.

"மறைதெரி முனிவநீ
வாய்மை ஆகிய
உறுதியை மொழிந்தனை
உயர்ந்த வீடுறும்

அறிவுடை முனிவரா்க்
கன்றியாம் அருள்
சிறுவருக்கு இத்திறஞ்
செப்பலா குமோ?

மேலும் கூறுகிறாள்.
நன்பெருஞ் செல்வமும்
நவையில் கொற்றமும்
இன்பமும் அழிவிலா
திருக்கும் ஆயுளும்
மன்பெருஞ் சீர்த்தியும்
மறுவில் வாழ்க்கையும்
அன்புடை இளையவர்
அடைதல் வேண்டுமால்"

என்றாள். உடனே, காசிபர் தம் ஆசிரியர் பதவியை நீத்தார். நீ கூறுமாறு பாடஞ் சொல்லவல்ல ஆசிரியனை நீயே கண்டு அமர்த்திக்கொள் என்று சொல்லி முனிவர் தவஞ்செய்யச் சென்று விட்டார். பிறகு அம்மூவரும் மாயையின் சொற்படி கேள்வியாற்றி சிவபிரானிடம் பல வரங்களையும் பெற்று அசுரகுல குருவாகிய சுக்கிரரிடத்தில் கற்கச் செல்கிறார்கள். அவர் இவர்கள் அறிவுக்குத் தக்கவாறு பாடஞ் சொல்கிறார். இவர்களும் சுவைத்துக் கேட்கிறார்கள். "புண்ணிம் ஆம் பாவம் போம்" என்று சொல்வார்கள். அதுவும் தவறு. காற்று மண்டலத்தில் உள்ள நீர்ப்பரப்பில் காற்றின் அசைவால் குமிழிகள் தோன்றுகின்றன. குமிழியிலுள்ள காற்று வேறு. மண்டலத்திலுள்ள காற்று வேறு அல்ல. குமிழி சிதைந்தால் அதிலடங்கியிருந்த காற்று வாயு மண்டலத்தில் சேர்ந்து விடுகின்றது. இதுபோலவே மெய்யாகிய பரம் பொருள் பிரகிருதியில் புகுந்து வேறு வேறு உயிராக வேறு வேறு உடம்பெடுத்து விளையாடுகிறது. குடத்தில் உள்ள ஆகாயம் குடம் உடைந்தபோது முன்போலவே பெரிய ஆகாயத்தில்தான் தானேயாக இருத்தல் போல உயிர்களும் உடம்புதோறும் வேறு வேறாகக் காணப்பட்டாலும், உடம்பு அழியும் போது பரம்பொருளாகவே நிற்கும். ஆதலால் சூரனே நீ உன்னையே பிரமம் என்று எண்ணிக்கொள். எண்ணி உங்களுக்குப் பகைவர்களாகிய தேவர்களுக்குச் சிறுமைகளைச் செய்துவா. அப்பொழுதுதான் உன்னை எல்லோரும் மதிப்பார்கள் என்று கூறினார்.

"பாசம் என்றும்
பசுவென்றும் மேதகும்

ஈசன் என்றும்
இசைப்பர். தளையெனப்
பேசல் மித்தை.
பிறிதிலை. ஆவியுந்
தேகமேவு சிவனும்
ஒன்றாகுமே"
இடங்கொள் மாயையின்
யாக்கைகள் ஆயின
அடங்கவும் நல்கி
அன்னவற்றூடுதான்
கடங்கொள் வானிற்
கலந்து மற்றவ்வுடல்
மடங்குமெல்லையில் மன்னவன்
தொன்மைபோல்

என்பது சுக்கிரர் கூறிய உறுதிமொழி இவர் கூறியது கிரீடாபிரமவாதம் (உலகம் பரம்பொருளின் விளையாட்டு) என்னும் பேச்சு எனப்படும். தேவர்களுக்குக் குரு வியாழன் என்பவர். அவர் ஒரு சமயம் இந்திரனுக்கு உறுதி உரைக்க வேண்டியதாயிற்று. முருகப் பெருமானால் சூரன் முதலிய அசுரர்கள் அழிந்த பின் இந்திரன் தேவர் உலகத்தில் பழைய படி இன்பத்தோடு வாழ்கின்றான். அப்பொழுது ஒரு நாள் அசுரர்களால் தன் குடும்பம் பட்ட சிறுமைகளை எண்ணினான். உடனே. உலக வாழ்க்கையைத் துறக்க வேண்டும் என்று தேவகுரு உணர்ந்தார். உணர்ந்து பின்வருமாறு உரைக்கின்றார் "உலக வாழ்க்கையே மெய்யானது. மறுபிறப்பு என்பது பொய். இன்பதுன்பம் என்பன உயிர்களுக்கு இயற்கையாக இருப்பவை. அவற்றிற்குக் காரணம் வினை என்று கொள்ள வேண்டியதில்லை. தவம். விரதம் முதலிய வற்றால் உடலை வருத்துவதே நரகம் ஆகும். வேறு நரகம் என்பது ஒன்றில்லை. இவ்வுலகில் உண்டு. உடுத்து இன்ப வாழ்க்கை வாழ்வதே உயிர்க்கு உறுதியாம் என்று உணர்த்தி அவனை இந்திர போகத்தில் மூழ்கியிருக்கச் செய்தார். இது உலகாயதம் எனும் ஒண்திறற் பாம்பின்— கலாபேதத்த கடுவிடம் என்று மாணிக்கவாசகரால் சித்திரிக்கப்படுவது. இன்னும் தக்கனுக்குப் பிரமன் செய்யும் உபதேசமும். தக்கன் மக்கட்கு நாரதர் கூறும் உறுதி மொழியும். தக்கவை. உயர்ந்தவர்கள் சில இடங்களில் இழிந்தவற்றையும். இழிந்தவர்கள் சில இடங்களில் உயர்ந்தவற்றையும் கூறுதல் உண்டு. அவை எல்லாம் இடம் பற்றி உயத்துணர்ந்து கொள்ளுதற்குரியன. "எப்பொருள். யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் பொது மறை சிந்தித்தற்குரியது.

சிறுகதை

# கண்

அகிலன் யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல கல்லூரியில் ஆண்டு ஒன்பதில் கல்வி கற்கும் மாணவன். பதினான்கு வயது அவனுக்கு இன்னும் முடியவில்லை. அவன் யாழ்நகரில் பிரபல பலசரக்கு கடைவியாபாரி சிவசுப்பிரமணியத்தின் ஒரே மகன் என்பது அவனது கல்லூரியிலும் அவர்கள் வீடுள்ள வட்டாரத்திலும் தெரியும். ஆனால் அவனை அவனது வீட்டுச் சூழலில் அநேகருக்குத் தெரியாது. அவன் ஒரு தனிப்போக்கு வீட்டிலே கேட்ட கேள்விகளுக்கு இரண்டொரு வார்த்தைகளில் பதில் சொல்வான்.

நண்பர்கள் என்று அவனுக்கு அதிகம் பேர் இல்லை. அவனுக்குப் பிடித்த நண்பர்களுடனும் அளவளப்பாய்ப் பேசமாட்டான். அவர்களைப் பேசவிட்டு அவன் கேட்டுக் கொண்டிருப்பான். அவன் ஒரு அகமுகி. தன் மனதுக்குள் வாழ்பவன். ஆனால் பேசாமல் இருந்து நடப்பவற்றை அவதானிப்பான். எதைப்பற்றியும் எவரைப் பற்றியும் அபிப்பிராயம் கூற மாட்டான்.

அதனால் அவனது கல்லூரியில் அவனுக்கு "அமுக்கு முட்டை" என்று பட்டம். அவனது சுபாவம் அப்படியிருந்த போதும் அவனை எவரும் வெறுப்பதில்லை. ஏனெனில் அவன் எவருக்கும் தீங்கு செய்பவனுமில்லை. நினைப்பவனுமில்லை.

அவனுடைய தகப்பனார் சிவசுப்பிரமணியம் ஊரறிந்த ஒரு முருக பக்தர். அவர் அதிகாலையில் எழுந்து அவர் வசிக்கும் வைமன் வீதியில், தெருநோக்கித் தலைகாட்டுகின்ற மல்லிகை மரங்களிலும் செவ்வரத்தை மரங்களிலும் பூத்திருக்கின்ற பூக்களைப் பறித்துக் கொண்டு போய் வீட்டிலே சுவாமி அறையில் முருகப்பெருமானின் திருவுருவப் படத்தின் முன்னே அர்ப்பணித்து நெற்றியிலும், தோள் பட்டைகளிலும், நெஞ்சிலும் திருநீறு பூசி காதிலே செவ்வரத்தைப் பூவைச் செருகி, கண்மூடி நின்று தன்வியாபாரம் சிறக்க அவரிடம் மன்றாடி, காலை எட்டு மணிக்கு முன்னர் கடைக்குப் புறப்பட்டு விடுவார். காலையில் ஒரு கிளாஸ் பால் குடிப்பார். உணவு எதுவும் சாப்பிடுவதில்லை.

கடையைப் பூட்டிவிட்டு வந்தால், நல்லூர்க்கந்தனிடம் அளவு கடந்த பக்தி. நல்லூரானிடம் நினைத்த நேரமெல்லாம் போய் வருவார். வெள்ளிக்கிழமை காலையிலும் மாலையிலும் நல்லூர்க்கந்தன் சந்நிதியில் அதிக நேரம் செலவிடுவார். "நல்லூரான் வீதி நடந்தால், வினைதீரும்" என்று அடிக்கடி முனகிக் கொள்வார்.

இரவில் படுக்கையில் புரளும் போது தூக்கமில்லாவிட்டால், ஒவ்வொரு புரளலுக்கும் "முருகா?" என்று கூறிக் கொள்வார். யாழ் நகரில் உள்ள அவரது கடையின் பெயரும் "முருகன் ஸ்ரோர்ஸ்" அங்கு காலை எட்டு மணிக்குச் சென்று கடை திறந்தால் மனைவி பிள்ளைகளை மட்டு மன்றி முருகனையும் மறந்து விடுவார். கடைபூட்டும் வரை வியாபாரம் தான் எல்லாம். சந்தை நிலைமை, நாட்டு நிலைமைகளுக்கேற்ப விலைகளை மாற்றியும், பொருள்களை வெளியில் விடாதும் இலாபம் சம்பாதிப்பதில் அந்தக் கடை வீதியில் "ஆள் ஒரு பேய்க்காய்" என்று அவர் பெயரெடுத்தவர்.

வாடிக்கையாளர் அக்கடையில் விற்கும் பொருள்களின் தரத்தைப் பற்றிக் கேட்கையில் திருநீற்று முகத்துடனும் காதில் பூவுடனும் இருந்து அவர் கூறுவதை எவரும் சந்தேகிப்பதில்லை. "உங்களிடம் வாங்கிய அரிசி மூட்டையில் கல் அதிகம்" என்று வாடிக்கையாளர் வந்து முறையிட்டால், கடையில் வேலை செய்கின்ற சிப்பந்திகளைத் திட்டித் தீர்ப்பார். வாடிக்கையாளர் எதுவும் கூறாது போய் விடுவார்கள்.

அவருக்கு முதல் மூன்றும் பெண்கள் குமர்ப்பிள்ளைகள். அவர்களுக்கு நல்லூரிலும் திருநெல்வேலியிலும் மூன்று பெருய வீடு கட்டி வைத்துள்ளார். கேட்கின்ற சீதனம் கொடுத்து டொக்டர், இஞ்சினியரைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். அகிலன் மூன்றாவது பெண்பிள்ளை பிறந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அருமையாய்ப் பிறந்தவன். அவன் மேல் அவருக்கு உயிர். அவனைச் செல்லமாய் வளர்த்தாலும் தனது வியாபாரத்தைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டுமென்ற ஆசையில் சனி ஞாயிறுகளிலும் விடுமுறை நாட்களிலும் கடைக்குக் கூட்டிச் செல்வார். அவனும் கடைக்குச் சென்று வியாபாரத்தில் தகப்பனுக்கு உதவி செய்திருக்கிறான். ஆனால் அகிலன் கடந்த ஆறு மாத காலமாக கடைப்பக்கம் செல்வதை நிறுத்திக் கொண்டான். தாயார் காரணம் கேட்டால் 'படிக்க வேணும்' என்று கூறி விடுவான். பிள்ளையின் படிப்பைக் குழப்பக் கூடாதென்று சிவசுப்பிரமணியமும் ஒன்றும் பேசுவதில்லை. கொஞ்ச நாளாக அகிலனின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

அவன் கோவில்களுக்குப் போவதை நிறுத்திவிட்டான்.
சாமிப்படத்துக்கு முன்னால் நின்று வணங்குவதில்லை.
நெற்றியில் திருநீறு பூசுவதுல்லை.

திருவிழாக் காலங்களில் நண்பர்களின் வற்புறுத்தலால் கந்தசாமி கோயிலுக்குப் போனதுண்டு. கும்பிடுவதற்கில்லை. அவனின் மாறுதலை அவதானித்த தகப்பனார் "ஏன் மோனே நீ இப்படிக் கோயிலை மறந்து விட்டாய்" என்று அவனிடம் கேட்டார். "நான் கோயிலை மறக்கவில்லை" என்று கூறிவிட்டுப் போய்விட்டான். தாயும் கவலையோடு காரணம் கேட்டாள், 'அப்படித்தான்' என்று அவளுக்குப் பதில் சொன்னான். "இவனை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கே' என்று தாயும் தகப்பனும் கவலை கொண்டனர்.

அவன் நாத்திகப் புத்தகங்கள் படித்ததாகவும் இல்லை.
வீட்டுக்கு வெளியே அதிக நேரம் திரிவதுமில்லை.

தகப்பனார் இந்த விஷயம் பற்றி ஏதாவது புத்திமதி கூறும்போது மௌனமாய் நின்று கேட்டுவிட்டுப் போய்விடுவான். ஒரு நாள் சிவசுப்பிரமணியத்தார் கந்தசாமி கோயிலுக்குப் போன போது அவர் வசிக்கும் தெருவில் இருக்கும் 'புறக்டர்' சங்கரப்பிள்ளை என்ன நீங்களும் மனைவியும். பெண்பிள்ளைகளுந்தான் கோவில் குளம் எண்டு அலையிறியள் உங்கடை மகனை ஒரு நாளும் காணேல்லையே! என்று கேட்டு விட்டார்.

அது அவருக்குப் பெரும் கவலையாகப் போச்சு. அன்று வீட்டுக்கு வந்து மனைவியைத் தனியாகக் கூப்பிட்டு அகிலனின் போக்கையிட்டு மனம் நொந்து "நீ தான் அவனிடம் ஆறுதலாக கதைத்து. என்ன காரணமெண்டு ஒருக்கா அறியப்பா!" என்று கூறினார்.

அன்றும் ஒரு வெள்ளிக்கிழமை. காலை பத்து மணியிருக்கும் அகிலன் தன் அறையிலிருந்து படித்துக் கொண்டுருந்தான். தாயார் மெதுவாக வந்து அவனுக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தாள்.

"தம்பி!"
'ம்'
"படிக்கிறியா!"
"ஓம்"

அவன் மேசையில் முழங்கைகளை யூன்றி நெற்றியில் கைவிரல்களைக் கோர்த்து வைத்துக் கொண்டு புத்தகத்தில் கண் விட்டிருந்தான். அவன் வந்தமர்ந்திருந்த தாயைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் அப்படித்தான்.

"இண்டைக்கி வெள்ளிக்கிழமை ராசா!"
"ஓம்"
"ஏன் ராசா இண்டைக் கெண்டாலும் கோயிலுக்குப் போகேல்லை"?
"— — — — — — — — —"

"படிக்கிற புள்ளை. கடவுளைத்தேடு சகலமும் உன்னைத் தேடும் எண்டு சொல்லுவினம்"
"சரிதான்!"
"அப்ப ஏன் கோயிலுக்குப் போறதை கும்பிடுறதை நிறுத்தினனீ?"

"அப்படித்தான்!"

"அப்படித்தானெண்டால். நான் கேட்ட கேள்விக்கு உது தானே பதில்?"

"என்னைப் படிக்க விடுங்கோ பிறகு சொல்றன்!"

"மோனே, எனக்கு நீ பதில் சொல்லத்தான் வேணும் அவன் தாயின் முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டுக் குனிந்து கொண்டான் தாயார் பதிலுக்காகக் காத்திருந்தாள். நீண்ட நேர மௌனம்.

"உன்னையிட்டு அப்பாவுக்குப் பெருங் கவலை"

"இதிலை கவலைப்பட என்ன இருக்கு?"

"தம்பி!"

"ம்"

"அப்பா கடையிலை நிம்மதியா வியாபாரஞ் செய்ய மாட்டார். கடவுளிடை அருளாலை தானே கடை நல்லா நடக்குது. நாங்களும் மதிப்போடை இருக்கிறம்!"

"சரிதான்!"

"மோனே நீ ஏன் கோயிலுக்குப் போறதில்லை. சாமி கும்பிடறதேயில்லை எண்டு அப்பா உன்னட்டைக் காரணம் கேட்கச் சொன்னவர் ராசா!" தாயாரின் முகம் அவனைக் கெஞ்சியது. அகிலன் குனிந்த தலை நிமிரவில்லை "அம்மா!" "அப்பாவுக்குச் சொல்லுங்கோ கடவுளுக்குக் காது மட்டுமில்லை கண்ணுமிருக்கெண்டு.

தாயார் விறைத்திருந்தாள்.

# வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதம் வளர்பிறையில் தொடங்கி இவ்விழா. இருபது நாட்களுக்கு ஸ்ரீரங்கத்தில் கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாள் நடைபெறும் மோகினி அவதாரம் அல்லது நாச்சியார்கோலம். பதினோராம் நாள் நடைபெறும் ஏகாதசி. ஆகியவற்றுக்கு லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள். ஆழ்வார்களின் திவ்ய பிரபந்தங்களிலுள்ள நாலாயிரம் பாடல்களும் இவ்விழாவில் பாடப்பெறுகின்றன. 18ஆம் நாளில் பெருமாளும் திருமங்கை ஆழ்வாரும் எதிர்ப்படும் நிகழ்ச்சியும் இவ்விழாவில் இடம்பெறுகின்றது. அவர் தொடங்கிவைத்த திருவாய்மொழி விழாவுடன் 20ஆம் நாளில் வைகுண்ட ஏகாதசித் திருவிழா முற்றுப்பெறுகிறது.

11ஆம் நாளிலும் அதன் பிறகு ஒவ்வொரு நாளும் அரங்கநாதப் பெருமான் பரமபாத வாயில் வழியாக வந்து உணவுப் பண்டங்கள் பெற்று. துறவிகளை வாழ்த்தி. ஊர்வலமாகக் கருவறைக்குத் திரும்புகிறார்.

# தைப்பூசம்

தை மாதத்தில் நிகழும் பெரிய திருவிழா தைப்பூசம். அதற்கு உரிய இறைவன் முருகன். உரிய சிறப்புத் தலம் பழனி. ஏனைய தலங்கள் திருத்தணிகையும் முருகனின் பிற படைவீடுகளும்.

இவ்விழாவும் முழு நிலா நாளில் நிகழும். முருகனடியார்கள் அவன் புகழ்பாடி. காவடி தாங்கி. கரகம் ஆடி. நெடுந்தொலைவு கால்நடையாக வருவார்கள். இந்நாளில் மதுரையில் வண்டியூரிலுள்ள மாரியம்மன் தெப்பக் குளத்திலும் ஒரு திருவிழா நிகழும். மீனாட்சி கோயிலிருந்து இறை உருவங்கள் இங்கு எடுத்துச் செல்லப்படும். பிறகு அழகான தெப்பங்களில் வண்ண விளக்குகளுடன் இறை உருவங்களை தெப்பக்குளத்தில் நடுவேயுள்ள மண்டபத்துக்குக் கொண்டு போவார்கள். தெப்பக்குளத்தின் நான்கு கரைகளிலும் வைக்கப்பட்டுள்ள விளக்குகளின் ஒளியும். தெப்பக்குளத்து நீரில் அவற்றின் பிரதிபலிப்பும். இசை நிகழ்ச்சிகளும். இனிய காட்சியாக இருக்கும். இதுபோன்ற ஒரு விழா பங்குனி மாதத்தில் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் நடத்தப்படுகிறது.

# முகப்பில் தெரியும் முகங்கள்!!!

கனடா—மொன்றியல் அருள்தரு துர்க்கை அம்மன் அருளாட்சி
செய்ய அமரப்போகும் புதிய ஆலயக் காணியில் அத்திபாரமிடச்
செல்வதற்கு முன்பு அம்பிகையின் திருவடிகளில் வழிபாடு செய்த
ஆலய அறங்காவலர். குழுத்தலைவர் திரு. நவம் ஜெகனுக்கு
ஆலயத்தின் பிரதம குரு சண்முகரட்ணராஜாராம் சர்மா அவர்கள்
தெற்பை அணிவித்து தேவியின் தெம்புப் பிரசாதம் வழங்கிய
போது எடுக்கப்பெற்ற படம்.

# அன்பு ரெக்ஸ்

**நாகரிக நளினத்தில் உடுப்புக்கள்**
**நாணயம் ஜொலிக்கும் நகைகள்**
**வந்து பாருங்கள் வாங்கத்துடிப்பீர்கள்**

Importers,
Whole Sale Retail of Fashion
Textiles,
and Jewellery

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர்
**நாடுகளுக்குரிய துரித**

## பணமாற்றுச் சேவை

# ANBUTEX

*Call:* *Siva or Nada*

3160 Eglinton #10
Scarborough, Ontario
M1J 2H3 Canada
Tel.: (416) 269-5684

ஆலயமணியின் ஓசையுடன் எமது ஆதரவாளர்களுக்கு வாழ்த்துக்கள்!!

## மஞ்சுளா பஷனுக்கு வாருங்கள்

மனைவியை கணவனை மக்களை மகிழ்விக்க கேட்டது கிடைக்கும்

**மஞ்சுளா பஷனில்**

இங்கிலாந்து. சிங்கப்பூர். தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலவண்ண ஆண்கள். பெண்கள். சிறுவர் சிறுமியர்க்கான உடுப்பு வகைகள்

பனாரிஸ். காஞ்சிபுரம். நைலெக்ஸ். மைசூர்சில்க். சுரிதார். வொயில் சாறிகள். பட்டுவேட்டி. சர்வானிசூட். குருத்தா. சாறி பிளவுஸ். லைனிங்துணி இவற்றுடன் எவர்சில்வர் பாத்திரங்கள்.

கலைப்பொருட்கள். சோடனைப் பொருட்கள். ஆடம்பரப் பொருட்கள். இமிற்றேசன் நகைகள். சுவாமிப்படங்கள். விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள் மற்றும் பலவிதமான எண்ணிலடங்காப் பொருட்கள்.

சர்வாணி தலைப்பாகை. தலைநகையாவும் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.

**திறந்திருக்கும் நேரம்**

திங்கள் முதல் வெள்ளிவரை

காலை 11.00 மணி—மாலை 9.00மணிவரை

சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்

காலை 10.00 மணி—மாலை 10.00 மணிவரை

## மஞ்சுளா பஷன்

5818 Sheppard Ave. East, Unit #203
(Sheppard & Cateforth Dr. (Markham Rd.)
Tel.: (416) 297-9875 / 297-5872